# இந்தியப் படை எங்களை வெல்ல முடியாததற்கு மக்கள் ஆதரவும், மனோவலிமையுமே காரணம் -மாத்தயா

(கொழும்பு)

'விடுதலைப் புலிகளின் உறுதியான மனோவலிமையும் எமக்கு என்றும் பக்கபலமாக உள்ள தமிழ மக்களின் ஆதரவும், எப்பிரச்சினைகளையும் தாக்குப்பிடிக்கும் எமது சக்தியுமே அரசியல் இராணுவ ரீதியாக இந்திய இராணுவம் எம்மை வெல்ல முடியாமைக்கு காரணங்களாகும்'.

விடுதலைப் புலிசள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தையா) 'லங்கா கார்டியன்' பத்திரிகை ஆசிரியர் திரு மேர்வின் டி. சில்வாவுக்கு அளித்த விசேட பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகின் நான்காவது பெரும் படையான இந்திய இராணுவம் இலங்கையில்

(12ம் பக்கம் பார்க்க)

பக்கங்கள் 12 விலை ரூபா 3-00

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 பங்குனி 5 ஷஃபான் பிறை 20 இதழ் 34

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 18-03-1990

## யாழ். பத்திரிகைகளுக்கு மட்டு. நூலகத்தில் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது நூலகத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளுக்கும் ஈழத்து தமிழ் சஞ்சிகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பத்திரிகையான ''இந்து'', 'தினமணிக்கதிர்' போன்ற பத்திரிகைகளைத் தருவிக்கும் பொது நூலக

(12ம் பக்கம் பார்க்க)

### கனடாவில் கடந்த வருடம்மட்டும்

# 931 இலங்கை தமிழருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது!

## 43 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(ரொரன்டோ)

**கனடாவில் அகதி அந்தஸ்துக்கோரி கடந்த வருடம் வந்த இலங்கைத் தமிழர்களில் தொள்ளாயிரத்து முப்பத்தொரு பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதுடன் நாற்பத்திமூன்று பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.**

1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நவம்பர் முப்பதாம் திகதி வரையான பதினொரு மாத காலத்திற்குள் 1,727 இலங்கைத் தமிழர்கள் அகதி அந்தஸ்துக் கோரி கனடாவிற்கு வருகை தந்தனர்

அகதிநிலை கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழர்களின் விண்ணப்பங்களை கனேடிய குடிவரவு, குடியகல்வு திணைக்களம் பரிசீலனை செய்தது.

இவர்களில் 974 பேரின் விண்ணப்பங்கள் மட்டும் கடந்தமாத இறுதி வரை விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதில் 43 பேரின் விண்ணப்பங்கள் பூரண விசாரணையின் பின் நிராகரிக்கப்பட்டது. ஏனைய 931 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அகதி அந்தஸ்திற்கு விண்

(12ம் பக்கம் பார்க்க)

### அரசு - விடுதலைப்புலிகள்

## பேச்சுக்களை குழப்ப இப்படி ஒரு சதி?

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் வயல்வெளியில் விவசாய வேலையில் ஈடுபட்ட சிங்கள விவசாயிகள் மீது இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிலர் படுகாயமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் "பக்மிற்றிய" என்னுமிடத்தில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியிலிருந்து அண்மையில் பாதுகாப்பு படைமுகாம் அகற்றப்பட்டதையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளுக்கும் அர

(12ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பூரண அமைதி: மாகாணசபை கொடி அகற்றப்பட்டது!

(திருகோணமலை)

திருகோணமலையில் பூரண அமைதி நிலவுகிறது.

நீண்ட நாட்களாக இந்திய அமைதிப்படையினரால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டு, சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் சிவில் நிர்வாகம் முழு அளவில் செயல்படுவதை விரும்பும் தமிழீழ விடுதலைப் புலிகள், கேந்திரமான இடங்களில் எல்லாம் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் செயலகத்தில் பறந்துகொண்டிருந்த மாகாணசபைக் கொடியை இப்பொழுது காண முடியவில்லை.

12ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கட்சியின் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவி

[12ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம் ஏற்படலாம்?

(கொழும்பு)

இலங்கையில் அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் ஏற்படலாமென கொழும்பில் பரவலாக செய்திகள் அடிபடுகிறது. என்னும் இச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை

இம் மாற்றங்கள் பெரும்பாலும் அமைதிப் படையினரின் முற்றான வெளியேற்றத்தின் பின்பே இடம்பெறலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் பதவி ஒரு வருடத்தின் பின்பு மாற்றப்படும் என இப் பதவியேற்பின் போது ஜனாதிபதி திரு பிரேமதாஸா தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## 24-ம் திகதிக்கு முன்னர் இந்தியப்படை முற்றாக வெளியேறும்!- ஜெனரல் கல்கட்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து இந்தியப்படையினர் மார்ச் 24ம் திகதிக்கு முன்னர் முற்றாக வெளியேறிவிடுவர் என்று ஜெனரல் ஏ. எஸ் கல்கட் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

குறுகியகாலவிஜயமொன்றை மேற்கொண்டு இரு இராணுவ உயரதிகாரிகள் சகிதம் கொழும்பு வந்துள்ள ஜெனரல் ஏ. எஸ் கல்கட், அரசு அதிகாரிகளிடம் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஜெனரல் கல்கட் மேலும் தெரிவிக்கையில்; திருகோணமலையிலிருந்தே இந்த கடைசிப் பிரிவு 24ம் திகதிக்கு முன்னர் ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடுவான மார்ச் 31ம் திகதிக்கு முன் வெளியேறுவர் என்றார்

தற்போது காங்கேசன் துறையில் தங்கியிருக்கும் சிறு பிரிவும் 24ம் திகதிக்கு முன் வெளியேறும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## ஹமீத் புலிகள் பேச்சு

[திருமலை]

திருமலையின் பாதுகாப்பு தொடர்பாக நேற்று அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீத்துக்கும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்குமிடையில் திருமலையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

இப்பேச்சுக்கள் சுமுகமாகவும் இருதரப்பிற்கும் திருப்தியாக அமையும் விதத்தில் நடைபெற்றதாகவும் திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. [சி]

### நட்புறவு உடன்படிக்கை

## இலங்கை- இந்தியதரப்பில் பெரும் கருத்து முரண்பாடு

(புதுடில்லி)

இலங்கைக்கும் - இந்தியாவிற்குமிடையில் 'புதிய நட்புறவு உடன்படிக்கை' ஒன்று கைச்சாத்திடுவதில் இரு தரப்பிற்கும் பெரும் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாக 'ஆசிய அரசியல் அவதானிகள்' தெரிவித்துள்ளனர்.

புதிய உடன்பாடு தொடர்பான இந்தியாவின் கருத்துக்கள் அடங்கிய குறிப்பு இலங்கைக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் இதற்கான பதிலை இதுவரை இலங்கை. இந்தியாவிற்கு அனுப்பவில்லை

அமைதிப் படையின் முற்றான வெளியேற்றத்தின் பின்பே இது தொடர்பான நகலை இலங்கை அனுப்பும் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த நட்புறவு உடன்பாட்டில் 87ல் கைச்சாத்தான ஒப்பந்தத்தின சரத்துகளை இலங்கை சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆனால் இந்தியா 87ல் கைச்

(12ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3576)

துன்னாலை வடக்கு றேட்டில் 5 பரப்புக்காணி மின்சாரம் கிணறு வசதியுடன் உள்ள வீடும் உடன்விற்பனைக்குண்டு தொடர்பு:- பி சிவராசசர்மா காளி கோவிலடி, 4-ம் வட்டாரம், புங்குடுதீவு. (சி-3596)

இரசாயனக் கலைச்சொற்றொகுதி விற்பனைக்கு உண்டு விலை ரூபா 45/- மட்டும். தொடர்பு:- ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே கே எஸ் வீதி, யாழ்ப்பாணம். (எ-604)

கண்டி வீதி நுணுவில் ஏற்றத்தில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. K. B சுந்தரம் 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (சி 3611)

### நாவல்கள்

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதிய ''பூஜைக்காக வாழும்பூவே'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பூவை ஒருத்தியின் புனித வாழ்வை சித்தரிக்கும் குடும்ப நாவல். ராஜன் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். All Ceylon Distributors, Jaffna - Colombo. (சி 3572)

### சேவை

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். பழைய தளபாடங்கள் வாங்கவும் விற்கவும் தொடர்பு கொள்ளவும். மகாலக்ஷ்மிரேட் குறுப், 75, மானிப்பாய் றேட் (ஈழநாடு அருகாமை), யாழ்ப்பாணம். (சி 3614)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3505)

### தேவை

பார்மசியில் வேலை செய்வதற்கு ஒருவர் தேவை மாநகர எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது தொடர்பு விளம்பர இல 616 மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். (ஏ 616)

### பார்மசி வகுப்புக்கள்

பார்மசி ஆரம்ப / மீட்டல் வகுப்புக்கள் இலங்கை மருத்துவ கல்லூரியால் நடாத்தப்படும். பார்மசி பரீட்சைக்குத் தோற்ற விருப்பவர்களுக்கான வகுப்புக்கள் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளன. தகுதி: க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் சித்தி. மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்க: நோர்தேன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 3570)

## ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக வெளியீடு

ஆசிரியர்:
''ஆத்மஜோதி''
நா. முத்தையா

சித்திரை மாதம் மீண்டும் வெளிவருகின்றது.
வருடாந்த சந்தா - ரூபா 60/.
தனிப்பிரதி - ரூபா 5/-
மாவட்ட முகவர்களாக நியமிக்கப்பட விரும்புவோரும் சந்தாதாரரும். உடன் விண்ணப்பிக்கவும்

**குருகுலம்,**
7ம் வாய்க்கால்
கிளிநொச்சி.
(சி-617)

## தவக்கால நற்சிந்தனை

### வாழ்க்கைக்கு இட்டுச்செல்லும் பயணமே தவகாலம்

தவககாலம் நாம் நினைப்பது போல துக்கத்தின் காலமல்ல. மாறாக மகிழ்ச்சியின் காலம். தவக்காலமும் அதனுடன் இணைந்த தபமுயற்சிகள் உபவாசம், ஒறுத்தல் தன்னை மறுப்பது ஆகியவைதன் நிறைவு உள்ளவை அல்ல. தவக்காலத்தின் சிகரமென இருப்பது கிறிஸ்துவின் பாஸ்கா கொண்டாட்டம். அதாவது அவருடைய பாடுகள், மரணம் உயிர்ப்பு அவருடைய உயிர்ப்பு (அதாவது சாத்தானின் ஆட்சியின் மேல் முழுமையான வெற்றி, இறுதி எதிரியான சாவின் மேல் வெற்றி) பாடுகள் மரணம் ஆகியவற்றிற்கு கருத்து தருவது. உயிர்ப்பு இல்லையெனில் சாதாரண ஒரு மனிதனுடைய வருத்த துன்பம் மரணம் போன்றதாகவே யேசுவின் பாடுகள் மரணம் இருக்கும் இவ்விதமான ஒரு நிகழ்ச்சியை கிறிஸ்தவர்கள் கொண்டாடுவதெனறால் அது மடமை.

தவக்காலத்தின் தொடக்கத்திலிருந்தே வழிபாட்டில் கிறிஸ்துவின் உயிர்ப்பு வலியுறுத்தப்படுகிறது.

தவக்காலம் சாவையல்ல வாழ்வை நோக்கிய ஒரு பயணம் என்பதை தவக்காலத்தின் வழிபாட்டில் வரும் வேத வாசகங்கள் தெளிவாக்குகின்றன தவக்காலம்ஒரு தேர்வின் காலம் சாவிற்கு இட்டுச்செல்லும் செயல்களை மறுத்து வாழ்வுக்கு இட்டுச் செல்லும் செயல்களை விரும்பி தேர்ந்தெடுக்கும் காலம்.

''இன்று நான் ஒரு பக்கத்தில் வாழ்வையும் நன்மையையும், மற்றொரு பக்கத்தில் சாவையும் தீமையையும் வைத்து உனக்குக காண்பித்தேன்...'' ''நான் வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன்வைத்துக் காட்டினேன்'' ''ஆதலால் நீயும் உன் சந்ததியும் வாழ்வு பெறவும், உன் உயிரும் நீடிய வாழ்வுமான ஆண்டவர் ஆணையிட்டுச் சொல்லிய நாட்டிலே நீ குடியேறவும், நீ உயிரைத் தேர்ந்துகொண்டு, உன் கடவுளாகிய ஆண்டவர் பால் அன்பு கூர்ந்து அவருடைய திருவுளத்துக்கு அமைந்து, அவரைப் பற்றிக் கொள்வாய்''

''அக்கிரமி சாகவேண்டும் என்பது நம் விருப்பமோ? அவன் தன் தீய வழியை விட்டு மனந்திரும்பி வாழவேண்டும் என்பதல்லவா தமது விருப்பம்''

''தன் மகனில் விசுவாசங் காள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த ஒரே பேறுன மகனையே அளிக்குமளவுக்கு உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.'' உதாரி மகன் திரும்பியபொழுது தந்தை மூத்த மகனுக்குக் கூறியது ''நாம் விருந்தாடி மகிழ்வது முறையே. ஏனெனில் உன் தம்பி இறந்து போயிருந்தான் உயிர்த்துவிட்டான், காணாமற் போயிருந்தான், கிடைத்து விட்டான்.''

ஆகவே இத் தவக்காலத்தில் வெறும் தப முயற்சிகளைச் செய்வதில் மட்டும் ஆர்வம் காட்டாது சாவிற்கு இட்டுச் செல்லக்கூடிய செயல்கள் அனைத்தையும் சாகடித்து, வாழ்விற்கு இட்டுச்செல்லும் செயல்களைத் தேர்ந்தெடுத்து வாழக் கற்றுக்கொள்வோம்.

அருட்திரு
**ச-யோ பிரான்சிஸ் அ. மதி**
பங்குத்தந்தை முகமாலை

## தேவை

**காசாளர்/ எழுதுவினைஞர்/ விற்பனையாளர்**

யாழ். நகரில் உள்ள எவர்சில்வர் காட்சியறைக்கு, மேற்படி பதவிகளுக்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. (19-03-90 ல் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் சமுகமளிக்கவும் )

**118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(எ-613)

குருகுலம்

**வதிவிட மேற்பார்வையாளர் (ஆண்கள்/WARDEN), (பெண்கள்/MATRON)**

## தேவை

மேற்படி பொறுப்பை ஏற்கக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் உடன் தேவை. பெயர், முகவரி, தகைமைகள், அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 1990-04-01ந் திகதிக்கு முன்னராக நிர்வாகச் செயலாளர், குருகுலம். 7-ம் வாய்க்கால், கிளிநொச்சி என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியச் சலுகைகள் உண்டு. இலவச வதிவிட வசதி, உணவு அளிக்கப்படும்.

குருகுலம். தலைவர்,
கிளிநொச்சி. கரைச்சி சைவவித்தியா
(எ-618) விருத்திச்சங்கம்.

### ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக வெளியீடு

## உதவி ஆசிரியர் தேவை

''ஆத்மஜோதி'' மாதாந்த சஞ்சிகையின் உதவி ஆசிரியர் பொறுப்பையும் குருகுலத்துக்குச் சொந்தமான 'சர்வசக்தி அச்சகத்தின் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளககூடிய ஒருவர் உடன் தேவை. பெயர் முகவரி, தகைமைகள், அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 1990-03-31ந் திகதிக்கு முன்னராக நிர்வாகச் செயலாளர், குருகுலம், 7-ம் வாய்க்கல், கிளிநொச்சி என்ற முகவரிக்குக் கிடைக்க் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும். ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியச் சலுகைகள் உண்டு. இலவச வதிவிட வசதி, உணவு அளிக்கப்படும்.

தலைவர்,
குருகுலம். கரைச்சி சைவவித்தியா விருத்திச் சங்கம்.
கிளிநொச்சி. (எ-620)

## காசாளர் வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள மொத்த, சில்லறை விற்பனவு நிலையமொன்றுக்கு காசாளர் பதவிவெற்றிடம் உள்ளது. மேற்படி பதவிக்கு க பொ. த. (உயர்தர) பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் சித்திபெற்றிருக்க வேண்டும். சம்பளம் $1500+50\times5+100\times5=2250\text{-}00$ வரை வழங்கப்படும். பிணைப்பணம் செலுத்துவது அவசியம். முழுவிபரங்களுடன் 25-03-90 க்கு முன் விளம்பர இல: 612, மே/பா ஈழநாடு என்ற முகவரிச்கு விண்ணப்பிக்கவும். (எ-612)

## உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி பொதுமுகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக் குறைந்தது 4000 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொதுமக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவைப்படுகின்றது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
பிரதி முகாமையாளர்,
இலங்கை மின்சாரசபை,
இல. 52, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(எ- 614)

நாயகன்
இன்றைய நாயகன்!
தணிக்கை சபையால்
தடைப்பட்ட நாயகன்!!

**ஹரன் திரையில்**
**4-வது வெற்றிவாரமாக**
**நாயகன்!!!**

தினசரி: காலை 10-30, 2-30, மாலை 6-30

★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜெனகராஜ்



## நாயகன்

(கலர்)

### ஈழநாடு

## விற்பனை முகவர் தேவை

பின்வரும் இடங்களுக்கு சட்டுப்பணம் (டிப்போசிட்) செலுத்தக்கூடிய 'ஈழநாடு' விற்பனையாளர்கள் தேவை. விரும்புபவர்கள்,

பொதுமுகாமையாளர்,
ஈழநாடு லிமிட்டெட், தபால் பெட்டி இல. 49,
63, சிவன் கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்

**விற்பனை முகவர் தேவையான இடங்கள்**


மருதங்கேணி, ஆனையிறவு, முருகண்டி. ஸ்கந்தபுரம், வவுனிக்குளம், மல்லாவி, துணுக்காய், மாங்குளம், புளியங்குளம், நெடுங்கேணி, ஒட்டிசுட்டான், முத்தையன்கட்டு, புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம், உடையார்கட்டு, விசுவமடு, தருமபுரம், கண்டாவளை, முரசுமொட்டை, இராமநாதபுரம், வட்டக்கச்சி, உருத்திரபுரம், பல்லவராயன்கட்டு, முழங்காவில், இலுப்பைக்கடவை, திருக்கேதீஸ்வரம், அடம்பன், முருங்கன்.

பொதுமுகாமையாளர்,
ஈழநாடு லிமிட்டெட்,
(ஏ 609)

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# பூநகரியிற் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்கள்

இலங்கையின் வடபாலுள்ள பெருநிலப் பகுதிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் இடையிலுள்ள பூநகரிப் பிரதேசம் வரலாற்றறிஞர்கள் தொல்லியலாளர் ஆகியோரின் கவனத்தைச் சமீப காலம்வரை அதிகம் ஈர்த்ததாகத் தெரியவில்லை. சுமார் அரைநூற்றாண்டுக்கு முன் ''பண்டைய யாழ்ப்பாணம்'' எனும் வரலாற்று நூலை எழுதிய முதலியார் செ. இராசநாயகம் பூநகரி அரசபுரத்திலுள்ள அழிபாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1971இல் தொடங்கிய யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள காரைநகர், திருவடிநிலை, மாதகல், பருளை, கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில் முதலிய இடங்களிலே சில மேலாய்வுகள் செய்தது. அக்காலகட்டத்திலே பூநகரியிலே உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. க. கிருஷ்ணமூர்த்தி அவ்விடத்திலேயுள்ள தொல்லியற் சின்னங்களிலீடுபட்டவராக. அவற்றுட் சிலவற்றைச் சேகரித்துத் தொல்லியற் கழகத்திற்கு அவைபற்றி எழுதிய சிறு குறிப்புரை, கழகவெளியீடான பூர்வகலாவிலே 1873இல் வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து எண்பதுகளின் முற்பகுதியிலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி சி. க. சிற்றம்பலமும், கலாநிதி பொ. ரகுபதியும் இப்பகுதியிலுள்ள சில தொல்லியல் அம்சங்களைத் தத்தம் ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதம் மேற்குறிப்பிட்டோரினதும் பேராசிரியர் கா. இந்திரபாலாவினதும் மாணவனும், இளம் வரலாற்று விரிவுரையாளருமான திரு. ப. புஸ்பரத்தினம் என்பவர் பல்கலைக் கழக மாணவர்களோடு மண்ணித்தலைக்கு ஓர் உலாசப் பிரயாணம் செய்தபோது,



வெட்டுக்காட்டில் கிடைத்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை

அங்கு சிதைந்த நிலையிலுள்ள பூநகரியின் பிறபகுதிகளிலும் சோழர்காலச் சிவாலயம் ஒன் புராதன தொல்லியல் சின்

**அண்மையில் விரிவுரையாளர் திரு. ப. புஸ்பரத்தினம் பூநகரித் தொல்பொருள் ஆய்வுக்கட்டுரை ஒன்றை யாழ். பல்கலைக்கழக ஆய்வரங்கில் சமர்ப்பித்தார்; அக்கட்டுரை தொடர்பான ஓர் கண்ணோட்டம்.**

றினைத் தற்செயலாகக் கண்டு பிடித்தார். அதன் பக்கத்தில் பழைய மட்பாண்ட ஓடுகள் சிலவற்றையும் பிறவற்றையும் னங்கள் பலவற்றைக் கண்டு பிடித்தார். குறிப்பாக சோழர்காலச் சிவாலயமே அவரின் முயற்சிக்கு மிகத்

பேராசிரியர் வி. சிவசாமி
(முன்னாள் செயலாளர் யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம்)

கண்ணுற்றார். பின்னர் தொடர்ந்து பலநாட்களாகத் திரு. மேகநாதன் எனும் ஆசிரியருடன் சேர்ந்து அப்பகுதியிலும் அதற்கப்பாலுள்ள தூண்டுகோலாக அமைந்தது. அதன் அமைப்பு. அங்குள்ள லிங்கம், அதனுடைய ஸ்தூபி, தூண்கள். ஒருசில சாசனங்

(10ம் பக்கம் பார்க்க)

## நமது பார்வையில்...

### எங்கே போகிறோம்?

இன்று நாடெங்கும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் பல்கிப் பெருகுகின்றன.

இலக்கியக் கூட்டங்களும், நூல் வெளியீடுகளும், கருத்தரங்குகளும் ஏராளம்; ஏராளம்!

புதுமைக் கருத்துக்களும், புத்துணர்ச்சிகளும் வரவேற்கப்படவேண்டியவை!

ஆனால், சில கருத்தரங்குகளில், பட்டிமன்றங்களில் கூறப்படுவதாக வரும் செய்திகள் மக்கள் நலன் பயப்பனவாக அமைகின்றனவா எனவும் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

மக்களுக்கு மாத்திரமல்ல, இலக்கிய சிருஷ்டிகர்த்தா தான் விரும்பும் எதையும் எப்படியும் சொல்லிவிட உரிமையுண்டு என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது.

அவ்வப்போது 'கிளுகிளுப்பை ஏற்படுத்திய இலக்கியங்கள் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போய்விட்டன என்ற வரலாற்று உண்மைகளைச் சிலர் மறந்துவிட்டனர்போல் தெரிகின்றது.

சமுதாயத்தினைக் கெடுக்கும் சீர்கேடுகளைக் கண்டு வருந்தி, சீர்செய்யத் தூண்டும் கருத்துக்களே நாட்டுக்கு நல்லது.

பொழுதுபோக்குக்கு இலக்கியம் உதவலாம்! ஆனால் பொழுதைக் 'கெடுக்க' இலக்கியம் உதவலாமா?

எழுத்துச் சுதந்திரம் உண்டு. ஆனால், 'ஆபாசக்' கருத்துக்களால் வருங்காலச் சமுதாயத்தைச் சீரழிக்கும் சுதந்திரம் உண்டா?

## கைத்தொழில்

# புல்லுக்கு வந்த புகழ்

செ. மயில்வாகனம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

கோடையிலும் வற்றுமற் பாய்கின்ற பாலியாறு கல்விளான் கிராமத்தின் இரண்டு பக்கங்களைத் தழுவிப் பாய்ந்து வளமளிக்கின்றது.

அங்குஒருவகைப்புல்லுண்டு. உருண்டை வடிவான பசிய தண்டைக்கொண்ட அப்புற்கள் தலையிலே மும்மூன்று சிறிய இலைகளைக் கொண்டனவாயும், நுனியை நோக்கிச் சிறுத்துச் சிறுத்துச் செல்வனவாயும, மூன்றரை நாலு அடிவரை உயரமுடையனவாயும், உட்புறத் துவாரமின்றிக் கிடைச்சி போன்ற பொருளால்நிரம்பியனவாயும்காணப் படுகின்றன.

அந்தப் புல் தென்னிலங்கையிலே காணப்படும் புல்லினங்களில் ஒருவகையைச் சார்ந்தது. பன்னத் தொழிலுக்கு ஏற்றது.

### புல்லின் தன்மையும்..

முன்னர் காட்டிய தன்மைகளைக்கொண்ட அப்புல்லைப் பன்னத் தொழிலுக்குப் பயன்படுத்தலாம். அந்தப் புல் முறியக்கூடியதாயும், அறக்கூடியதாயும் இருந்தது. அப்புல்லை வெயிலில் உலரவிட்டுப்பார்த்தபோது அது முறிந்தோ அறுந்தோ போகும் தன்மையுடையதாய் மாறியிருப்பதைக் கண்டோம். அந்தப் புல்லைப்பற்றியோ, அதன உபயோகத்தைப் பற்றியோ அங்குள்ளவர்கள் எவரும் அறிந்திருக்கவில்லை. முற்காலத்தில் வீடு வேய்பவர்கள் கிடுகுகளைக் கட்டவும் புகையிலைகளை உணர்த்தும்போது அவற்றை முடிந்து தூக்கவும் இப்புல்லை உபயோகித்தார்கள்.

வீணாக அழியும் புல்லை வாழ்க்கையில் உபயோகஞ் செய்வதற்குப்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புளியங்கூடலிலிருந்துவந்து குடியேறிய குடும்பத்திலுள்ள ஒரு பெண்மணி அங்கேயிருந்தார் அவர் பனையோலையால் அழகான பைகள் செய்யக்கூடியவராயிருந்தார். அவரது பெயர் திருமதி தங்கம்மா பொன்னம்பலம். வெட்டிக் காயவிடப்பட்ட புற்களைத் தகடுபோலப் பக்குவஞ்செய்வித்து அவைகளைக்கொண்டு ஒரு பையை அப்பெண்மணி மூலம் செய்விக்கப்பட்டது. பெருஞ்சிரமத்துடன் செய்து முடித்த அப்பை அழகு, பலம் ஆகியவற்றிற் சிறந்து விளங்கியது. அப்பெண் அப்படித் தொடர்ந்து பல பைகளைச் செய்தார். பலர் அப்பைகளை விலைக்கு வாங்கிச் சென்னர்.

அத்தொழில் விளம்பரமின்றியே பிரபலம்பெறத்தொடங்கியது.

புல்லைப் பக்குவஞ்செய்தலில் உள்ள சிரமம், பையைச் செய்ய எடுக்கும் நேரம், அதனாற் கிடைக்கும் வருவாய் என்பனவற்றை நோக்கியபோது உற்பத்தியாளர் சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லை. அத்தொழில்மூலம் ஆற்றோரத்தில் வளரும் புல் முழுவதையும் பயன்படுத்த முடியாதெனத் தெரிந்தது.

### பாய்நெசவு ஆரம்பம்

பாலியாற்றங்கரைப் புல்முழுவதையும் பிரயோசனப்படுத்த வேண்டுமானால் புற்பாய் நெசவை ஆரம்பிக்க வேண்டும். ஆக்கப்படும் பாய்கள் அழகும் உறுதியும் உடையனவாக இருக்க வேண்டும். புற்பாய்களை நெசவு செய்வதற்குப் புடவை நெசவு செய்யுந் தறி பொருத்தமாகக் காணப்பட்டது. அவைகள் தொழில்நுட்பச் சிக்கலுடையனவாயிருந்தன. தறியின் சில உறுப்புகளுக்கு வெளிநாடுகளை எதிர்பார்க்கவேண்டியும் இருந்தது.

வெளிநாட்டுப் பொருள்களின் உபயோகமின்றி ஆக்கக்கூடிய தொழில்நுட்பக் குறைவுடைய ஒரு தறியை அமைப்பதற்கு மாதிரிப் படங்கள் வரைந்து முடிக்கப்பட்டன. அதன்படி முதலாவது தறியை திரு. க. பொன்னம்பலம் என்பவரது வீட்டிலே அமைத்து முடித்தோம்.

இவருடைய வீட்டிலே பாய் நெசவு ஆரம்பமானது. அந்தத்தறியிலே முதலாவது பாய் நெசவு செய்துமுடிந்தது. ஊரவர்கள் வந்து பார்த்து ஆச்சரியப்பட்டனர்

யாழ். அரசாங்க செயலகத்திலே குடிமனைத் தொழிற்பகுதியினரால் ஒரு பொருட்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கு பாய் ஒன்றை உதவி அரசாங்க அதிபர் எடுத்துச் சென்றார். புல்லுவேலையிலே அது பாய்களுக்குள் முதலாம் பரிசு கிடைத்தது.

புல்லிலே முதற் செய்ய வேண்டியது (தரம்பிரித்தல், உலர விடுதல், சாயமூட்டல் பக்குவப்படுத்தல் போன்ற) வேலைகளைச் செய்து கொண்டு நெசவை மாத்திரம் செய்வதாயிருந்தால் கைதேர்ந்தவர் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் ஒரு நாளில் தறியிலே ஐந்து அல்லது ஆறுபாய்களைச் செய்ய முடியும்.

திரு. பொன்னம்பலம் பாய் நெசவுக்கு பல நுட்பங்களை அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டார். அதனால் அவரது பாய்கள் எல்லாவிடங்களிலும் பெரும் வரவேற்பைப் பெற்றன. படுக்கைப்பாய்கள், பந்திப்பாய்கள் சபைக்கு விரிக்கக்கூடிய நெடும்பாய்கள் அவருடைய தறியிலே உற்பத்தி செய்யப்பட்டன. முஸ்லீம் பள்ளிவாசலுக்கும் இவரது பாய்கள் சென்றுள்ளன.

இவ்வேலைகளையும் வருமானத்தையும் கண்ட அவ்வூர் வாசிகள் வேறு சிலரும் இத்தொழிலை ஆரம்பித்தனர். உதவிய சாங்க அதிபரின் முயற்சியினால் திருமதி பரமேஸ்வரி கிட்டப்பா என்னும் ஆசிரியை வந்து பாய் நெசவில் விசேட பயற்சியளித்தார். சில மாதங்கள் தங்கியிருந்து அவருடைய முயற்சியினால் பாய்கள் புதுமையும் அழகும் பெறத்தொடங்கின. அவரும் மற்ற செல்ல மக்களாற் புதுமுறைகளுங் கைவிடப்பட்டன.

இன்று கல்விளானிலும் அயலூர்களிலும் பல குடும்பங்கள்


(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மரபு வழிவந்தோர் வாழும்

# ரினிட்டாட் தீவில் 8 வருடங்கள்!



டாக்டர் விநயகலிங்கம்







இரா. கனகரத்தினம்

**வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள தீவுகளில் தமிழர்கள் குடியேற்றப்பட்டார்கள். ஏறக்குறைய 35 ஆயிரம் தமிழர் மரபு வழி வந்தவர்கள் இத்தீவுகளில் வாழ்கிறார்கள்.**

**இத்தீவுகளில் ஒன்றான ரினிட்டாட் தீவில் எட்டு வருடங்களை செலவிட்ட டாக்டர் விநயகலிங்கம் அங்கு நேரில் அறிந்தவற்றை இப்பேட்டியில் விளக்குகிறார். உலக பண்பாட்டு இயக்க ஸ்தாபகர் குரும்பசிட்டி இரா கனகரத்தினம் அவரைப் பேட்டிகாண்கிறார்.**

((சென்ற வாரத் தொடர்ச்சி)

கேள்வி: இந்தியர்கள் எப்படி அங்கு குடியேறினார்கள்?

பதில்: இந்த இந்தியக் 'கூலி' களைத் தெரிவு செய்வதில்கூட அன்றைய பெருந்தோட்ட முதலாளிகள் கையாண்ட புத்திசாலித்தனமான அணுகுமுறை வியப்புக்குரியதொன்றாகும். ரினிட்டாட் தீவு மலைகளால் சூழப்பட்ட நாடு. அடிக்கடி இங்கு ஏற்படும் வெள்ளப்பெருக்கு சமபூமியை வெள்ளத்தில் மூழ்கடித்துவிடும். சுதேசி மக்களோ மலைச்சரிவுகளில் வாழப்பழகிக்கொண்டவர்கள். அடிக்கடி நீரில் மூழ்கிவிடும் இப்படியான சமவெளிகளில் வேலைசெய்து பழக்கம் இல்லாதவர்கள். எனவே இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைத் திரட்டும்போது ஏறக்குறைய இதே சூழ்நிலையில் வாழும் உத்தரப்பிரதேச மாநிலத்திலிருந்து பெருமளவு ஆட்களைத் திரட்டினார்கள். இந்தியாவில் கங்கை நதி பெருக்கெடுக்கும் போதெல்லாம் இவர்கள் நிலைமையைச் சமாளித்து வாழப்பழகிக்கொண்டார்கள். சமவெளியில் நிலைத்து நின்று தொழில் செய்யக் கூடிய சென்னை மாவட்ட எல்லைப்புறத்தமிழர்கள், தெலுங்கு மக்களும் திரட்டப்பட்டுக் கப்பல் ஏற்றப்பட்டார்கள். கல்வி அறிவு அற்ற பொருளாதாரத்தில் நலிவுற்ற இவர்கள், தாம் நீண்ட பல மாதங்களை ஆழ்கடலில் செலவு செய்ய வேண்டிய, முற்றிலும் புதிய மொழி, பண்பாடு, கலாச்சாரம் கொண்ட ஒரு உலகத்துக்குப் பிரயாணம் செய்யப் போகிறோம் என அரம்பத்தில் அறிந்திருக்கவில்லை. பக்கத்தே உள்ள இலங்கைக்கு, மலேசியாவுக்கே புலம் பெயருகிறோம் என அறிவுறுத்தப்பட்டார்கள். ஆக, நீண்ட கடல் பிரயாணத்தில் நோய் வாய்ப்பட்டு செத்தொழிந்தவர்கள் போக, எஞ்சியோர் தம்மிடையே நிலவிய ஏற்றத்தாழ்வுகளை சாதி உணர்வுகளை எல்லாம் ஆழ்கடலில் மூழ்கடித்துவிட்டு ''எல்லோரும் ஓர் இனம் - நாம் எல்லோரும் இந்தியர்'' என்ற உணர்வுடன் கரிபியன் கடற்கரைகளில் வந்து இறங்கினர்.

கே; இன்றைய ரினிட்டாட் டுபாக்கோ தீவுகளில் வாழும் நம் இந்தியர்கள் – சிறப்பாகத் தமிழ் மரபு வழி வந்தவர்கள் - இவர்களை நாம் மூன்றும் தலைமுறையினர் என்று கூறுவோம் – இவர்கள் நிலைபற்றி - தொடருங்கள்.

ப: இப்படிக் கொண்டு செல்லப்பட்ட இந்தியத் தொழிலாளர் நான் முன்பு கூறியதுபோல, நீண்ட சமவெளிகளில் குறியேற்றப்பட்டனர். இந்தியர்கள் அவர்கள் எந்த மொழியைய, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் ஒன்றாகவே - குடியேற்றப்பட்டனர். புலம் பெயர்ந்த இந்த இந்தியருள் ஹிந்தி மொழி பேசுவோர் தான் பெரும்பான்மையினர். எனவே அவர்கள் ஆளுமையும் அவர்களின் மொழியான ஹிந்தியின் செல்வாக்கும் மேலோங்க ஆரம்பித்தது.

கே: இன்றுள்ள நிலைமை என்ன?

ப: இன்றும் இதே நிலைதான். ஆரம்ப காலங்களில் தமிழ்மொழி பேசுவோர் - தமிழை மட்டுமே தெரிந்திருந்தோர் பெருமளவில் இருந்த காலகட்டத்தில் தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நன்னூல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவை கற்பிக்கப்பட்டும், நாடகங்கள், தெருக்கூத்துக்கள், கரகம், கும்மி, சிலம்பாட்டம் என ஓரே தமிழ்ப் பண்பாட்டு மயமாக ரினிட்டாட் தீவின் இந்தியர் குடியேறிய பகுதி விளங்கியது. அதுமட்டுமல்ல - தமிழர் குடியேறிய ஏனைய கரிபியன் தீவுகளான மாட்னிக், குவாட்லோப் போன்ற பல தீவுகளுக்கு ரினிட்டாட் தீவை கேந்திர நிலையமாக இருந்து கலைஞர்களை, ஆசிரியர்களை அனுப்பிவைத்து ஒரு கலைப் பாலமாக - மொழியைப் பரப்பும் ஒரு மையமாக - இருந்து வந்தது. ஆனால் இந்த நிலை துரதிஷ்டவசமாக நீடிக்க முடியவில்லை.

கே: காரணம் எனன?

ப: கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப வந்தவர்கள் இந்த மொழி, பண்பாட்டின் முளைகளை வெட்டி அழிக்க முற்பட்டனர். ஹிந்தி மொழி பேசுவோர் ஆதிக்கம் மேலோங்கிய நிலை, புதிய தலைமுறையினர் புதிய சூழ்நிலையிற் காட்டிய ஆர்வம் ஆபிரிக்கரிடையே கலப்புத் திருமணம் மதமாற்றம் இவை இந்த நிலைக்கு காரணிகளாயின. எனவே இன்றைய நிலையில் நாம் தமிழர்கள் என தனித்துப் பிரித்து - நோக்குவதை விடுத்து இந்தியர் என்ற நிலையிலேயே அவர்கள் பிரச்சனையை அணுகவேண்டும். அங்கு பரந்து வாழும் தமிழ் மரபு வழி வந்தவர்கள்கூட இன்று அப்படியே தம்மைக் காட்டிக் கொள்ள விரும்புகிறார்கள். இப்படி நான் கூறுவதால் தமிழ் இனமே அங்கு முற்றாக அழிந்துபோய்விட்டது என்று கூறவில்லை. இன்று கூட ''சென்னைக் குடியிருப்பு'' (Madras Settlement) என்ற பகுதி உண்டு.

கே: அங்கு சைவக்கோவில்கள் உண்டா?

ப: ஏராளமான சிறிய பெரிய கோவில்கள் உண்டு. நாங்கள் அங்கு தங்கியிருந்த காலத்தில் ஒரு வைரவர் கோவில் தமிழ்ப் பெயர்ப் பலகையுடன் இருப்பதைக் கண்டு அங்கு சென்று வழிபட்ட பின்பு கோவில் பூசகருடன் கலந்துரையாடினேம். தாம் ஒரு பிராமணர் என்றும் ஆனல் தமிழ்ப் பேச முடியாதென்றும் தமிழ்மொழி மீது தனக்கு நிறையப் பற்றுதல் உண்டென்றும் ஒரு தமிழ்க் கோவிலுக்கு தமிழில் பெயர்ப்பலகை போடவேண்டுமென்ற ஆவலில் இலங்கையில் இருந்து ரினிட்டாட் பல்கலைக்கழகத்துக்கு வேலைக்கு வந்த ஒரு தமிழர் மூலம் அதனை எழுதுவித்ததாகவும் குறிப்பிட்டார். இப்படிப் பல கோவில்கள் முழுக்க முழுக்கத் திராவிட பாணியில் அமைக்கப்பட்டவை தமிழர் வாழும் பகுதிகளில் ஏராளமாக உண்டு.

கே: தமிழர் எத்தனை பேர்?

ப: நாட்டின் மொத்த சனத்தொகையில் இந்தியா இன்று 40% விழுக்காட்டினரே இவர்களுள் தமிழர்கள் ஏறக்குறைய 10 விழுக்காடு என்று கூறலாம். வட இந்திய மக்கள் தம் மதம், மொழி இவற்றில் கூடிய ஈடுபாடு கொண்டு பொருளாதாரத்தில் சிறந்த ஒரு நிலையை வகிக்கும் அதே வேளை தமிழ் மரபு வழி வந்தோர் மதம் மாறி, மொழி மறந்து ஏனையஇனமக்களோடு கலந்து அழிந்து வருவது மிகவும் கவலைப்படவேண்டிய ஒரு அம்சம். ஆனல் நாம் ஒன்றைக் கவனிக்கவேண்டும். இன்றைய ரினிட்டாட்டில் சுதேசிகளான ஆபிரிக்கர்கள் கூடத் தம் மொழியை மறந்து விட்டார்கள். சரியாகச் கூறுவதாயின் ஆபிரிக்க மொழிகள் எதுவும் ரினிட்டாட்டில் பேச்சு வழக்கில் இல்லை. எங்கும் எதிலும் ஆங்கிலமேதான், ஆங்கிலம் தான் ஆட்சிமொழி, மக்களிடையே தொடர்பு மொழி, அபூர்வமாக கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய சில தமிழ் மரபு வழி வந்தோர் உயர் நிலையிலும் இருக்கிறார்கள். உதாரணமாக டாக்டர் பிரோ கோப் (Dr Procope) என்பவர் சென்னையைச் சேர்ந்த தமிழ் மரபு வழி வந்தவர். கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர். தாம் ஒரு தமிழர் என்று கூறிவருவதோடு தமிழர்களின் ரினிட்டாட் வருகை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார். மூன்சாமி (முனுசாமி) என்று மற்றொருவர். இவர் எம்முடன் பல்கலைக்கழகத்தில்இருந்தவர். சொக்கலிங்கோ என்பவர் இன்னுமொரு தமிழர். இவர் ரினிட்டாட்டில் ஒரு ஆங்கிலத் தினசரியை நடத்தியவர். நான் முன்பு குறிப்பிட்ட ஒன்றை நீங்கள் கவனிக்கவேண்டும். ரினிட்டாட்டின் மொத்த ஜனத்தொகையில் இந்தியா 40 விழுக்காட்டினரே. எனவே அரசியல் ரீதியாக இந்தியர் நிரந்தரச் சிறுபான்மையினரே. அரசாங்க உத்தியோகங்கள் யாவும் இங்கு கறுப்பர்களின் ஏக போக சொத்தாக உள்ளது. எனவே இந்தியர் தம் சுய முயற்சிகள் மூலம் முன்னேறி அரச துறையைத் தவிர்ந்த ஏனைய துறைகளில் உயர்ந்த நிலைகளில் உள்ளனர். தமிழர் மரபு வழிவந்தவர்களும் இதற்குப் புறநடை அல்ல. மேலும் இந்தியத் தொழிலாளர்களை இறக்குமதி செய்தபோது அன்றிருந்த ஆங்கிலேயர் அவர்களின் ஒப்பந்தத்தில் இந்தியர்களுக்கு ஏராளமான சலுகைகளைத் தந்திருந்தனர். உதாரணமாக ஒப்பந்தகாலம் முடிந்து தொழிலாளர்கள் இந்தியா திரும்பாது மீண்டும் தொடர்ந்து வேலை செய்தால் அவர்களுக்கு காணிகள் குடியிருப்புக்கள் இலவசமாக வழங்கடபட்டன இந்த ஷரத்து மூலம் ஏராளமான இந்தியர் விவசாயம், வர்த்தகம் போன்ற துறைகளில் மளமளவென முன்னேறினர். நெல் உற்பத்தி-வர்த்தகத்தில் இன்று இந்தியரே முன்னணி வகிக்கின்றனர். நெல்லை ரினிட்டாட்தீவில் அறிமுகம் செய்தவர்களே இந்தியாதான். இன்று அரிசிச் சாப்பாடு ரினிட்டாட்டில் அன்றாடம் புழக்கத்தில் உள்ள உணவாக மாறுவதற்கும் இந்தியரே காரணிகளாகும். நெல்லை மட்டுமல்ல—முருங்கை மரத்தைக்கூட அங்கு அறிமுகப்படுத்தியவர்கள் இலங்கையிலிருந்து ரினிட்டாட் பல்கலைக் கழகத்துக்கு கடமையாற்றச் சென்ற சில தமிழர்களான விரிவுரையாளர்களே! இன்றுகூட ரினிட்டாட் பல்கலைக் கழகத்துக்குச் செல்லும் எவரும் பச்சைப் பசேலெனச் செழித்து வளர்ந்து கொண்டிருக்கும் இந்த முருங்கை மரங்களை அந்த பல்கலைக் கழக வளாகத்தில் பார்க்கலாம்.

கே; இந்தியர் சுயமுயற்சியால் முன்னேறி வருகிறார்களா.

ப: ஆம், அரசியல் ரீதியாக அரச உத்தியோக ரீதியாக (40 விழுக்காட்டினரான) சக்திவாய்ந்த ஒரு சிறுபான்மை இனம் புறக்கணிக்கப்படும் போது ஏற்படும் சிக்கல்கள் வளர்முக நாடுகளில் இன்று காணப்படும் ஒரு பொதுப் படையான அம்சம். இந்த நிலை ரினிட்டாட்டைப் பொறுத்தவரை எப்படியான ஒரு நிலைமையைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதை நான் பின்பு கூறுவேன். ஆக சுயமுயற்சி மூலம் முன்னேறிய இந்தியர் தலைசிறந்த டாக்டர்களாக, வழக்கறிஞர்களாக உலகில் தலைசிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரர்களாக நாட்டின பொருளாதாரத்துக்கு உயிர் நாடியான வர்த்தகர்களாக முன்னேறி வருகிறார்கள்.

கே: இந்தநாடு எப்போது சுதந்திரம் பெற்றது.

ப: 1962ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிரிட்டிஸாரிடமிருந்து ரினிட்டாட் டுபாக்கோ தீவுகள் சுதந்திரம் பெற்றன இந்தச் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து நடாத்தியவர் நாடு போற்றும் வீரர் சுதந்திர ரினிட்டாட்டின் முதல் பிரதமர் எறிக் வில்லியம்ஸ் ஆகும். தலைசிறந்த சவ்விமானும் தாராள சிந்தையும் கொண்ட திரு. எறிக் வில்லியம்ஸ் நாட்டுக்குச்செய்த பெரும்பணி என்னவென்றால் நாட்டில் வாழும் பல்வேறு இனமக்களையும் முழுச்சுதந்திரம் கொண்ட மக்கள் தொகுதியாக வளர்த்தெடுத்ததே. மதம், மொழி, பண்பாடு இவற்றால் முற்றிலும் மாறுபாடு கொண்ட ரினிட்டாட் தீவுமக்கள் இவர் ஆட்சிக்காலத்தில் எதுவித கட்டுப்பாடுமில்லாமல் தம் சொந்த முயற்சிகளால் முன்னேறி ரினிட்டாட்டை வளமிக்க ஒரு நாடாக்கினர்,

கே: இங்கு தமிழ்க்கலை எந்த நிலையில் இருக்கிறது.

ப: ரினிட்டாட் தீவில் வாழும் இந்தியர்களுள் பணவசதி மிக்கவர்கள் தம் குழந்தைகளைத் தம் மூதாதையர் நாடான இந்தியாவுக்கு அனுப்பி நடனம், சங்கீதம் முதலியன கற்பித்து வருகிறார்கள். தமிழ்மரபு வழி வந்தோரும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்நாட்டுக்கனுப்பித்தமிழ்க் கலைகளைப் பயிலுவித்து தமிழ்க் கலை நிகழ்ச்சிகளை ரினிட்டாட்டில் நடாத்திவருகிறார்கள்.

(தொடரும்)

## நூல் அரங்கு

### ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் நினைவுச் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்

வெளியீடு - சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை —விலை ரூ 10/-

இதில் விரிவுரையாளர்கள், அறிஞர்கள், புலவர்கள், ஆகியோரின் எட்டுச் சொற்பொழிவுகளும், ஐந்து கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

சமய பண்பாட்டுச் சிறப்பு, ஆன்மீகம், மந்திரப்பெருமை, திருமுறைப் பெருமை அவை காட்டும் வாழ்வுநெறி போன்றவை இளம் தலைமுறையினரின் சமய வாழ்வுக்குப் பெரிதும் உதவக்கூடியவை.

இந்துசமயம். இந்து நாகரீகம், ஆகிய பாடங்களைப் பயில்வோருக்கு இந்த நூல் நன்மைபயக்கும்.

வாங்கிப் படிப்பதாற் சபையின் தொண்டு வளர உதவி செய்ததாகவும் முடியும்.

### நீர்வேலி செல்லக்கதிர்காம அந்தாதி

பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயரின் 21 கீர்த்தனைகள் இதிலே இடம்பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவித அமைப்புப் பெற்றுள்ளன.

கீர்த்தனைகளின் ராகம் தாளம் ஆகியனவும் தரப்பட்டுள்ளன. பக்திச் சுவையுள்ள இக்கீர்த்தனைகளை இசைக் கச்சேரிகளிலும், பக்திப்பாடல் நிகழ்ச்சிகளிலும் பாடிப் பயன் பெறலாம்.

### பூஜைக்கு வாழும் பூவை

மீராவெளியீடு, யாழ்ப்பாணம்—விலை ரூபா 40/-

இது மீராவெளியீட்டகத்தின் பதினோராவது வெளியீடு.

''தீக்குள் விரலை வைத்தால்...''— இத்தலைப்பைக் கேட்டாலே எழுத்தாளர் கே. எஸ். ஆனந்தனின் பெயர் நினைவுக்கு வரும்.

அந்தச் சிறந்த படைப்பைப்போன்றே இந்த நாவலையும் படைத்துள்ளார்?

இது ஒரு குடும்பக்கதை. இந்து என்ற பெண், ஓர் குடும்பத்தைக் காப்பாற்றப் போய்ப்படும் இன்னல்கள் அழகாகச் சித்திரிக்கப்படுகின்றன; கதையோடு நாமும் ஒன்றிப்போய்விடுகிறோம்.''


பலரும் படிக்க வேண்டிய கதை.

—சிவா

# தொடர் நவீனம்

# யாக குண்டம்

-செங்கை ஆழியான்



**வா**ய்க்குள் அதக்கியிருந்த தாவடிப் புகையிலை, மிக இதமாகச் சாற்றைச் சுரந்தது. கிளாக்கர் சரவணமுத்தர் புகையிலைச் சாற்றினை ஒரு விதமான போதை மயக்கத்துடன் சுவைத்தபடி வாங்கில் அமர்ந்திருந்தார். அளவோடு புகை போடப்பட்டு, ஓராண்டு பாடத்தில் இருப்பிருந்த புகையிலை. வெற்றிலைக்கடை சிவசம்பர் கிளாக்கரைக் கண்டதும், புகையிலைச் சிப்பச் சாக்கினை எடுத்து விரித்தார். அப்போதே அப்புகையிலையின்

[7]

குணம், மணம், காரம் அவருக்குப் புரிந்துவிட்டது.

''என்ன சிவசம்பர், உது வெள்ளடிவாலன் போல இருக்குது. அப்படியொரு மணம் மூக்கிலேறுது. சாக்கை விரிக்கவே வாயில எச்சில் சுரந்திட்டுது.''

சிவசம்பர் அவரைப்பார்த்துச் சிரித்தார். அச்சிரிப்பில் ஒரு பெருமிதம், சிலிர்த்தது: ''தரகு கந்தையர்தான் தீர்த்துத் தந்தவர். பாடமா அப்படியே எடுத்திட்டன். விலையைக் கேட்டா சிவசத்தியமா ஏங்கிப்போவியள். பொன்தான். ஒரு முழ நீளம்... விரிச்சால் உண்மையாக் கிளாக்கர், வாழையிலைதான். அவ்வளவு அகலம் கண்டியளோ. தாவடித் தம்பிப்பிள்ளையின்ர இந்தப் பாடத்தில கனபேர் கண் வைச்சிருந்திருக்கினம். விலை கொஞ்சம் கூடத்தான். பார்த்தும் பாராமல் வேண்டிவிட்டன்.''

புகையிலையின் மொறமொறப்புத் தெரியாமல் இருப்பதற்காகச் சிவசம்பர் அளவாகத் தண்ணீர் தெளித்திருந்தார். பக்குவமாக ஒரு புகையிலையைத் தேர்ந்தெடுத்து அளவாக விரித்துக்காட்டிவிட்டு, குருத்தோலைப் பிணையலோடு கிள்ளியெடுத்தார். மடித்து சுற்றி அவரிடம் கொடுத்துவிட்டு, குருத்தோலைப் பிணைப்போடு தங்கிவிட்ட ஒருவாய் புகையிலையை, முடிச்சு நீக்கி எடுத்துக் கொடுத்தார். சரவணமுத்தர் ஆவலோடு அதனை வாங்கி வாயில் அதக்கிக் கொண்டார். கண்டோசை வாயில் அதக்கிக் கொண்ட சிறு குழந்தை ஒன்றின் மகிழ்ச்சி கலந்த பூரிப்பு அவரின் முகத்தில் தெரிந்தது.

''சோக்கடா, சிவசம்பு. உதுக்கு எவ்வளவு கொடுக்கலாம்.''

அந்தப் புகையிலையைவாங்கி வந்ததிலிருந்து நான்கைந்து தடவை, கிள்ளி வாயில் இட்டுக் கொண்டதை இராசம்மா கவனியாமல் இல்லை.

''அப்படி என்னப்பா அதில கிடக்குது?'' என்று அடக்க முடியாமல் கேட்டும் வைத்தாள்.

''அதில இருக்கிற சுவை உனக்கென்ன தெரியும்.''

''எல்லா மனிசரிலும் ஒவ்வொரு கெட்ட பழக்கம், இருக்கும் போல. பொன்னரப்பாவுக்குச் சாராயம். உவன் இரத்தினத்திற்குக் கள்ளு. சிலருக்குச் சிகரெட்டு... சுருட்டு. இந்த ஆம்பிளையள் எப்படித்தான் இந்தக்கெட்ட பழக்கங்களைப் பழகிக்கொள்ளுகினமோ தெரியாது. உங்களுக்கு ஒரு கண்டறியாத தீன் பொயிலை.'' என்றபடி இராசம்மா எழுந்திருந்த போது சரவணமுத்தர் தடுத்தார்.

''இஞ்ச வா... என்னணை சொல்லிட்டுப்போறாய்?'' சரவணமுத்தர் வார்த்தைகளில் ''என்னணை'' வந்தால் அவர் வெகு குஷியாக இருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும்: ''ஆக ஆம்புளையளுக்குத்தான் கெட்ட பழக்கங்களோ? பெண்டுகளுக்கு இல்லையோ? சொல்லட்டோ?''

அவர் என்ன சொல்லப் போகிறார் என்பது இராசம்மாவிற்கு விளங்கும். அவள் சிரித்தபடி எழுந்திருந்தாள்: ''அந்தக் காலத்தில ஆச்சியும் அபபுவும் சிலநேரத்தில கணச்சூட்டிற்குப் பனங்கள்ளுக் குடிக்கும் கதை சொல்லுவியள். ஆச்சி சாப்பிட்டுவிட்டுச் சுருட்டுப் பிடிக்கிறதைச்சொல்லுவியள். ஊருலகத்தில நடக்காததே?''

வாசலில் நாய் ஒன்று குரைத்தது.

''தபால்காரனுக்கும்...'' என்றபடி இராசம்மா வேகமாக எழுந்தாள். அவள் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. வாசலில் சயிக்கில் ஒன்று வந்து நின்றது. மணிச்சத்தம் அழைத்தது. வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளில் எவராவது கடிதம் போட்டிருப்பார்கள். கடிதத்தைக்கண்டதும் பிள்ளைகளைக்கண்டதுபோல இந்த மனிசி பூரித்துப் போகுது. இதயத்தில் ஓராயிரம் ஆசாபாசங்களை அடக்கி வைச்சுக் கொண்டு ...விழிகளில ஒரே ஏக்கம்.

இராசம்மாவின் ஏக்கம் அவருக்கும் இல்லாமலில்லை. குழந்தைகளின் மழலைகள் நிறைந்த வீடுகளைக் காணும்போது அவர் துவண்டுவிடுவார். அவருடைய பேரப்பிள்ளைகள் எல்லாரும் வெளிநாட்டில். அவரை அவர்களுக்குத் தெரியுமோ? யார் இந்தக்கிழவன்? அப்பப்பாவா? அம்மப்பாவா?

ஒரு குழந்தையைக்கூட ஆசை தீரத் தூக்க முடியவில்லை. பாசத்தோடு அணைக்க முடியவில்லை. அவர்களின் மழலைகளைக் கேட்க முடியவில்லை. மனிதனுக்கு அந்த அந்தக்காலத்தில் சிலஉறவுகள் தேவை. அவருடையவாழ்க்கை பாலைவனமாக வறட்சியுற்றிருக்க அந்த உறவுப்பயிர்கள் முளைவிடவேண்டும். குழந்தையாக இருக்கும்போது தாயின் அன்பு, தந்தையின் அரவணைப்பு. வளரும்போது இனிய நண்பர்களின் உறவு. இளைஞனாகியதும் ஒரு கன்னியின் புன்முறுவல், பேச்சு, ஸ்பரிசம். இல்லறத்தில் மனைவியின் பணிவிடை, குழந்தைகளின் மழலை, அவர்களின் வளர்ச்சியில் காணும் இன்பம். பின்னர் மருமக்கள். வயதான காலத்தில் பேரப்பிள்ளைகளின்

கொஞ்சல் மொழிகள். இது தான் வாழ்க்கையின் உறவுச் சுழற்சி. அவர்களின் வாழக்கைச் சுழற்சி இறுதிக்கட்டத்தில் அரைகுறை வட்டமாக நின்றுவிட்டது.

பேரப்பிள்ளைகளின் பல வர்ணப்போட்டோக்களை எடுத்து வைத்துப் பார்த்துப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுவிடும் இராசம்மாவின் தாபத்தை அவர் உணராமலில்லை

''இது மூத்தவன்ரை இரண்டாமவன். சரியான குழப்படியாம். இது இவையின்ர மூத்தவன். சரியாகத் தாத்தா மாதிரி உரிச்சு வைச்சிருக்கிறான். இப்ப நடக்கிறானாம். இந்தப்படத்தில இருக்கிறது சந்திரனின்ர மூத்தவன். கண்ணாடியோட நிக்கிறான். பாருங்கோ. வெள்ளைக்காறிச்சியள்தோத்துப்போவாளவை. கண்பட்டிடக்கூடாது. இது தவமலரின்ர மூன்றாவது. என்ர படத்தைப் பார்த்து அம்மம்மா என்று சொலலுதாம்.''

வாசலிலிருந்து இராசம்மா ஒரு கடிதத்துடன் வந்தாள். நீல நிற ஏயமெயில் கடிதம். அவசரமாக அவள் உடைப்பது தெரிந்தது. தலைவாசலில் ஏறும்போது சொன்னாள்: ''பிரான்சில இருந்து மூன்றாமவன் கடிதம் போட்டிருக்கிறான்.''

''மோகனே? அதிசயமாக இருக்குது. எஞ்சினியருக்குக் கடிதம் எழுத நேரமே கிடைக்காதே?'' என்றபடி வாயில் அதக்கியிருந்த புகையிலைத் துண்டை முற்றத்தில் துப்பினார்.

பிரித்த கடிதத்தை அவரிடம் நீட்டினாள், இராசம்மா

''படியுங்கோ...''

மோகன் எழுதியிருந்தான்: தன் குடும்பத்தாரின் நலத்தைத்தெரிவித்துவிட்டு பெற்றாரின் நலனை விசாரித்திருந்தான். மல்லிகா ஒழுங்காகப் படிக்கிறாளா? சுசிலா படிக்கிறாளா? சுரேந்திரன் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்கிறானா? என்றெல்லாம் விசாரித்திருந்தான்.

''...அனந்திற்கும் தாராவிற்கும் ஐயாவின் படத்தையும் அம்மாவின் படத்தையும் காட்டினேம். கிரான் பா, கிரான் மா எனச் சொல்கிறார்கள். கிரான் மா நல்ல பியூட்டிவுல் லேடி என்கிறான் அனந்...'' வாசிப்பதை நிறுத்திவிட்டு சரவணமுத்தர் மனைவியை நிமிர்ந்து பார்த்தார்.

''எனக்கெல்லாம் விளங்குது. படியுங்கோ. உங்களைப் பற்றி அனந் என்ன சொல்கிறானும்?'' அவளுடைய குரலில் ஆவல், சந்தோசம், பூரிப்பு.

''என்னைப்பற்றி என்ன சொல்வான்? கூ இஸ் திஸ் கன்றிபுருட் என்றிருப்பான்.''

''அப்படி யெண்டா?

''யார் இந்தக்காட்டான். அழகான கிரான் மாவிற்குப் பக்கத்தில் இப்படியொரு கரிவண்டா என்று கேட்டிருப்பான்''

''நீங்கள்கறுப்பெண்டாலும் உங்கட லெட்சணம் ஆருக்கு வரும்...'' என்ற இராசம்மாவின் முகத்தில் அந்த வயதிலும் நாணம் படர்ந்தது. தனது ஐம்பத்தேழுவயதுக் காதலியைச் சரவணமுத்தர் பாசத்தோடு பார்த்துப் புன்னகைத்தார். மடியிலிருந்து வெள்ளடிவாலனை எடுத்து வாயில் போடப்போனபோது இராசம்மா தடுத்தாள். ''முதலில் காகிதத்தைப் படியுங்கோ முழுசா.''

''சரி கேளப்பா''

''.. தவமலரின் கலியாண வீடியோக் கொப்பியை ஒருக்கா டெக்கில போட்டுப் பார்ப்போம். அப்போது எங்களுடன் யாழ்ப்பாணத்துப் பையன் ஒருவனும் இருந்தார். அவர் இங்கு ஒரு கொம்பனியில் வேலை பார்க்கிறார். நல்ல பையன் ஒழுங்கானவன். கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். அவரும் வீடியோ பார்த்தார். அதில் தங்கச்சி மல்லிகா சேலை கட்டி நல்லா விழுந்திருக்கிறாள். பலவிடங்களில் வாறாள். சிவப்பு சேலையும் ஆளும் நல்ல எழுப்பமாகத் தான் இருக்கிறாள்......''

சரவணமுத்தர் கடிதத்தைப் படிப்பதைநிறுத்தி விட்டு மனைவியை நிமிர்ந்து பார்த்தார்: ''விளங்குதோ இராசம்மா? எஞ்சினியர் என்ன சொல்லப்போறாரெண்டு. மல்லிகாவை அந்தப்பொடியனுக்கு பிடித்து விட்டது. பொடியனின் விலாசம் இருக்குது. பொடியனும் தங்கட வீட்டிற்கு எழுதிவிட்டான். பேசி முற்றாக்கி மல்லிகாவைப் டரான்ஸிற்கு அனுப்பி வைக்கவும்.''

''முடியாது...'' என்று வீரிட்டாள்.

சரவணமுத்தர் உண்மையில் திகைத்துப் போனார். மனைவியின் உள்ளக்கிடக்கையை அவர் நன்கறிந்திருந்தார். என்றாலும் இராசம்மா இப்படி அலறியது கிடையாது.

''ஏனப்பா, கத்துறாய். பிள்ளையளை ரியூசனுக்கும் பள்ளிக்கும்அனுப்பிப் போட்டு கிளாக்கர் மனிசியிட்ட ஏதோ சேட்டைவிட, மனிசி கத்துதாக்கும் என்றெல்லே அயல் நினைக்கப்போகுது.?''

''பகிடி விடுகிற நேரமே இது? இப்பவே அவனுக்குக் கடிதம் எழுதுங்கோ. மல்லிகாவை அங்க அனுப்பமுடியாதெண்டு. அவளுக்கு இங்கினேக்க எங்கையாவது கலியாணம் செய்து வைச்சு அவளின்ர குழந்தைகளையாவது...'' தொடர்ந்து கூறமுடியாது விம்மல் குறுக்கிட்டது. குலுங்கிக் குலுங்கி அழுதாள். இதயத்தில் பாரமாக அழுத்திய பாசச்சுமைகள் வடிகால்களாக இறங்கின. தன் மனதை அழுத்திய உறவுத் துயர்களின் கருமுகில்திரள் கரையும் மட்டும் அழுதாள். அவர் அவளைத் தேற்றவில்லை.

அழுதாலாவது மனப்பாரத்தை குறைக்கட்டும்.

''என்ன பாவம் செய்த பிறப்பு. நான் எட்டுப்பிள்ளையளைப் பெத்துத் திக்கிற்கொன்றாக அனுப்பிவிட்டு... நானே அனுப்பினன். அதுகள் தான் ஒவ்வொரு காரணத்தோடை எங்களை இங்க தவிக்கவிட்டுட்டு விமானத்தில பறந்துதுகள். ஒவ்வொருத்தனும் ஒவ்வொருத்தியும் தத்தம் செயல்களுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டினம். இனக்கலவரம் கொழும்பில இருக்க முடியாது என்றான் ஒருத்தன். டொக்டருக்குப் படிச்சிட்டு இங்கத்த பிச்சச்சம்பளத்திற்கு இங்க தூங்கிறதே என்றான் ஒருத்தன். என்னை ஆமிதேடுது என்றிட்டு ஒருத்தன் வெளிநாட்டுக்கு ஓடினன். பெட்டையள் என்ன செய்வாளவை. கட்டி வைச்சம் மனிசன்மாருக்குப் பின்னால ஓடிட்டாளவை. இந்த ஊரில இப்ப ஒருத்தரும் இருக்கேலையே?, பிரச்சனை இல்லாத நாடுதான் எது? பிறந்த மண்ணை விட்டு அனாதைகளாக ஓடிவிட்டு, இருக்கிற கொஞ்சநஞ்சப் பிள்ளைகளையும் கூப்பிடத்திட்டம் போடுறான்கள்.''

இராசம்மா கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

''இப்ப என்னநடந்திட்டுது, இராசம்மா. அவன் எழுதிக் கேட்டிருக்கிறான். முடியாது என்று எழுதிவிட்டால் போகுது......''

''கெதியில மல்லிகாவிற்கு இங்கினேக்க ஒரு கலியாணம் பேசுங்கோ.''

''படிக்கப்போறன் என்கிறாள்''

''அவள் படிச்சது போதும் இங்கினேக்க பாருங்கோ.''

''உம்மடை அண்ணன்ர மோன் கனகு...''

அவள் விக்கித்துப்போய் கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''மல்லிகா கொடுத்து வைக்கவில்லை. அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லை. அண்ணன்மாரின்ர ஸ்ரேரசுக்கு ஒரு றெயின் ரீச்சர் சரியில்லையாம். எவ்வளவு அருமையான பொடியன்...ம்...''

''அவள் சொன்னளா''

''சொன்னள்''

அவர் மௌனமாக முற்றத்தைப் பார்த்தார். கோழிகள் மண்ணைக்கிளறின. நாய் தூரத்தில முடங்கிக் கிடந்தது.

''சரி படியுங்கோ, வேறை என்னவாம்.''

''புயல் மாதிரி பொங்கினையப்பா, இப்ப படிக்கச் சொல்லுறாய்.?''

''புத்தியில்லாத பிள்ளையள். எழுதிப்போட்டுதுகள் எங்கிருந்தாலும் ஒரு குறையில்லாமல் நல்லாயிருக்கட்டும். வாசியுங்கோ.''

அவர் கடிதத்தைத் தொடர்ந்து படித்தார்:

''...இத்துடன் கடிதத்தை முடிக்கிறன். காசு தேவையென்றால் எழுதவும். மூத்த அண்ணன் பணமனுப்பியதாக போன் பண்ணியிருந்தார்....''

சரவணமுத்தர் வாய்விட்டுச்சிரித்தார். கன்னத்தசை வலிப்பதுபோல இருந்தது. வலது சுட்டுவிரலை வாயில்விட்டு வலது கன்னத்து உள்தசையைத் தடவிக் கொண்டார்.

''என்னப்பா?''

''சூட்டுப்பருப்போல கிடக்குது. இந்தக்கிழமை சரியாக முழுகவில்லைக் கண்டியோ?''

''வாய் அவிஞ்சிருக்கும் சும்மா பொயிலையைத்திண்டதால.''

''இருக்கும் இருக்கும்''

மல்லிகா கதவைத்திறந்து கொண்டு வருவது தெரிந்தது.

''தம்பியின்ர காகிதம் வந்ததாக அவளுக்குச் சொல்ல வேண்டாம்'' என்று ஏனோ இராசம்மா கணவனை எச்சரித்தாள்.

# பல்சுவை விருந்து

**மீனுக்கு வாலில் கண்**

இந்து மா சமுத்திரத்தில் காணப்படும் 'அபிசால்' மீனுக்கு வாலில்தான் கண்கள் இருக்குமாம்.

**வெள்ளைப் புலி**

வெள்ளைப் புலிக் குட்டியைக் கண்டிருக்கின்றீர்களா? அதிசயப்படாதீர்கள். கடந்த ஆண்டு மே மாதத்தில் கல்கத்தாவிலுள்ள அலிப்பூர் மிருகக்காட்சிச் சாலையில் பிறந்த அப்புலிக்குட்டி தாய்ப் புலியுடன் 'இணைபிரியாது' வாழ்ந்து வருகிறது.

**நிமிடத்திற்கு 499 எழுத்து**

இமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த சோலான் மாவட்டத்திலுள்ள 45 வயதான ராஜேந்திரசிங் என்ற பல் வைத்தியர் உலகத் தட்டெழுத்துக் கலைப்போட்டியில் மூன்றாவது முறையும் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

பிரிட்டனில் நடைபெற்ற 18ஆவது தட்டெழுத்துப் போட்டியில் இவர் கலந்து கொண்டு தான் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே தயாரிக்கப்பட்ட 'ரெமிங்டன்' டைப்ரைட்டரில் நிமிடத்திற்கு 499 எழுத்துக்கள் டைப் செய்து தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

**இரண்டு மைல் தூரம்**

பள்ளிசிறுார்கள் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை எல்லோரதுவிரலிடுக்கு வுலிலும் அமர்ந்து ஊர்ந்து விளையாடுவது 'குமிழ்முனை' பேனை (போல்பொயின்ற்) என்பது தெரிந்ததே.

சாதாரணமாக ஒரு குமிழ் முனை பேனையை தொடர்ந்து ஊர்ந்து ஓட விட்டால் இரண்டு மைல் தூரம் நீளத்தைக் கடந்தோடி ஓய்ந்துவிடுமாம்.

**அதிக நேரம் அழுதது ஆண்தான்**

யார் தொடர்ந்து விடாமல் அதிகநேரம் அழுகிறார்கள் என்பதறகாகயூனவில் ஒருபோட்டி நடந்தது. இந்தப்போட்டியில் 85 பேர் பங்குபற்றினர்கள். போட்டியில் பரிசுபெற்றது பெண்ணல்ல, ஒரு ஆண்தான். பெண்ணுக்கு இரண்டாவது பரிசுதான் கிடைத்தது. கிலக் சமாரக்மந்திர் என்ற அமைப்புத்தான் இப்போட்டியை நடாத்தியது.

**பயிலுவோர் தொகை அதிகரிப்பு**

அமெரிக்காவிலுள்ள 3000 கல்லூரிகளில் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இது கல்லூரிக்கு செல்லும் வயதுடையவர்களில் 50 சத விகிதமாகும்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இது 35 சத விதமே. பிரிட்டனில் இது 14 சதவிகிதமாகும். இதுவரை கல்லூரிக்கு செல்லும் எண்ணம் கொண்ட சகல அமெரிக்கர்களுக்கும் இடமகிடைத்துள்ளது. நான்கு வருடம் படிப்புக்கு அரசு கல்லூரிகளில் ஏற்படும் செலவு 1980ல் 14,440 டாலராகும். இன்று இந்தச் செலவு 25.000 டாலருக்கு அதிகமாகிவிட்டது. தனியார் கல்லூரிகளில் இச்செலவு 26.000 டாலரி விருந்து 50,000 டாலருக்கும் அதிகமாகிவிட்டது.

**மனைவிகளின் கண்ணீர்**

நெதர்லந்தின் தலைநகரமான ஆம்ஸ்டர்டாமில் கடற்கரையில் உள்ள கோபுரத்திற்கு பெயர் 'அழுகின்ற கோபுரம்' 16ம் நூற்றுண்டில் வணிகர்கள் தங்கள் வியாபாரத்தின் பொருட்டு, கப்பல்களில் புறப்படுவர். அந்தக்கோபுரத்தின் கீழே, மனைவிமார்கள் கணவன்மாரை வழியனுப்பவந்து கூடுவார்கள். கப்பல் புறப்படத் தொடங்கியதும், மனைவிமார் கண்ணீர்விட்டு கதறி அழுவார்கள். இதனுல் அழுகின்றகோபுரமெனபெயர்நிலைத்துவிட்டது.

**யுத்தத்தில் மடியும் அப்பாவிகள்!**

உலகில் நடைபெற்ற 25 பெரிய யுத்தங்களில் இதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை மும்பது லட்சம். இதில் ஐந்தில் நான்கு பங்கு இராணுவத்தினர் அல்லாத அப்பாவி பொதுமக்களாகும்.

## அதிக நாட்கள் வாழும் ஜப்பானியப் பெண்கள்!

உலகில் ஜப்பான் நாட்டைசேர்ந்த பெண்கள்தான் நீண்டநாள்வாழ்கிறார்கள்இவர்களின் ஆயுள் காலம் சராசரி 81 ஆண்டுகளாகும். இவர்களுக்கு அடுத்தாக ஐ வா ந் து, ஹாலந்து ஆகிய நாடுகளின் பெண்கள் அதிககாலம் உயிரோடு இருக்கிறார்கள். ஆண்களில் ஐலாந்து நாட்டினரின் ஆயுட்காலம் அதிகம். அதற்கு அடுத்து ஜப்பானிய நாட்டுக்காரர் அதிக நாள் வாழ்கிறார்கள் ஜப்பான் நாட்டு ஆண்களின் சராசரி ஆயுள் காலம் 50 வருடங்களாகும்.

1985ல் ஜப்பான் மக்கள் தொகை 12 கோடி 10 லட்சமாகும். இதில் 7 கோடி 25 லட்சம் பேர் 65 வயதைக் கடந்தவர்களாகும்.

**23 குழந்தைகளை விற்ற தந்தை!**

போர்த்துக்கல் நாட்டில் ஓறினு டதபால்யா என்ற 38 வயதான ஒருபெண் 24 குழந்தைகளுக்கு தாயாராகியிருக்கிறுள்.

இவர் கணவனுக்கெதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்தாள். அந்தப்புகாரில் தான் முறைப்படி திருமணம் செய்யாவிட்டாலும், லிஸ்பனை சேர்ந்த தனது கணவனுடன் 16 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும், தான்பெற்றெடுத்த அத்தனை குழந்தைகளும் அவருக்கே சொந்தமென்றும், அப்படியிருந்தும், அவர் பாசம் எதுவுமின்றி குழந்தைகளை விற்றுவிடுகிறார் என்று தெரிவித்திருந்தாள்.

இந்தப்புகாரை செய்யும்போதும் அப்பெண் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாள்.

தன்வயிற்றில் வளரும் குழந்தையையும் கணவன் விலைபேசி விட்டதாகவும் தன்னுடன் இருந்துவரும் 6 வயது குழந்தையைத்தவிர மற்ற 23 குழந்தைகளையும் கணவன் விற்றுவிட்டதாக அப்புகாரில் மேலும் தெரிவித்திருந்தாள்.

**மனிதஉயிரின்நிறமென்ன?**

மனித உயிர் அல்லது ஆவியின் சக்தி என்ன? அதன் தன்மை, நிறம் எப்படிப்பட்டது? என்பதை அறிய யாருக்குத்தான் ஆவல் இருக்காது! அமெரிக்க வைத்திய ஆய்வாளர் இந்த ஆர்வத்தினுல் அபூர்வமான அனுபவத்தை பெற்றுள்ளார்.

ஒரு சில நிமிட நேரத்தில் உயிர் பிரியப்போகும் நிலையிலுள்ள வயோதிபரை காற்றுப்புகாத கண்ணுடிக்கூண்டில் அடைத்துவிட்டனர். உயிர் எவ்வாறு வெளியேறுகிறது என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ள டாக்டர்கள் மிக ஆவலாக கண்ணிமைக்காமல் காத்திருந்தனர்.

உயிர் பிரியும் நேரம் வந்தது. அந்த வயோதிபரின் உடல் முழுவதும் ஒரு விநாடி அதிர்ந்தது. அவரது மூக்கு வழியாக நீலநிற வாயு வெளியேறியது. அடுத்த விநாடி காற்றுப் புகாதவாறு அமைக்கப்பட்டிருந்த கண்ணுடிக் கூண்டு பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அபூர்வமான அந்த நீலநிற வாயு "ஆவி" வெளியேறியது.

**குதிரை பஸ்கள்**

1823ம் ஆண்டு குதிரையால் இழுக்கப்பட்ட பஸ்கள் பொது மக்களின் போக்கு வரத்துக் கருதி பிரான்சில் சேவைக்கு விடப்பட்டது. 'ஒம்னஸ்' என்றுல் எல்லோரும் பயன்படக்கூடிய பொதுவான ஒன்று என பொருள்படும். இதனுல் இதற்கு 'ஓம்னிபஸ்' என்று இதன் உரிமையாளர் பெயர் சூட்டிவிட்டார். அதுவே பெயர் நிலைத்துவிட்டது. இது ஒரு பிரஞ்சு மொழிச் சொல.

**கனவு**

ஞாபகமறதிப் பேராசிரியர் ஒருவர் தம் நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தார். "இன்றைக்கு ஒர் அதிசயம்! என் வகுப்பில் நான் நின்று கொண்டு பாடம் நடத்துவதாக கனவு கண்டேன்...!"

"இதில் என்ன அதிசயம் இருக்கிறது" என்றுர் நண்பர்.

"கண் விழித்ததும் நான் வகுப்பில் நிஜமாகவே பாடம் நடத்திக்கொண்டிருப்பதைக் கண்டேன்.'' என்றுர்.

ஆ. வெங்கடரமணன்
யாழ், மத்திய கல்லூரி

**தமிழின் பெருமை**

வள்ளுவர், இரண்டு இனங்களாக மனிதர்களை பிரித்திருக்கின்றுர். ஒன்று சான்றோர் மற்றது கயவர். உலகின் உயர்ந்த குணமான சான்றாண்மை படைத்தவர்கள். இவர்களை சான்றோர் என்றும் தாழ்ந்த குணம்படைத்தவர்கள் கயவர் எனவும் தமிழில் அழைக்கப்படுகிறது.

நான் பல பல்கலைக்கழக பேராசிரியர்களையும், ஆங்கில அறிஞர்களையும். சான்றாண்மை கயமை ஆகிய இரு சொற்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குமாறு கேட்டேன். எல்லோரும் கையை விரித்துவிட்டனர். —கி. ஆ. பெ.

## தற்கொலை செய்வதற்கு அடர்ந்த காட்டுப்பகுதி

ஜப்பானில் மவுண்ட்பிஜி என்ற காட்டுப்பகுதி தற்கொலைக்கு பெயர்போனதாகக் கருதப்படுகிறது. இந்த அடர்ந்த காட்டுப்பகுதியில் வானளாவிய மரங்கள் பெருந் தொகையில் காணப்படுகின்றன. தற்கொலை செய்ய விரும்புவோர் இந்தக்காட்டுக்குள் புகுந்து பெரிய மரங்களின் உச்சியில் ஏறி கீழே குதித்து தற்கொலை செய்து விடுகிறார்கள். இதனுல் சடலங்கள் சிதறிவிடுகின்றன. சிதறிய சடலங்களை தேடி எடுப்பது காவலாளருக்கு பெரும் தொல்லையாக உள்ளன.

ஆண்டுக்கு 40 தற்கொலைகள் இந்தக் காட்டுப்பகுதியில் இடம்பெறு கின்றன. பொலிஸார் இந்தக்காட்டை அழித்துவிடும் முயற்சிக்கு மக்கள் எதிர்ப்பு காட்டுகிறுர்கள். தற்கொலை செய்து கொள்ள முயல்பவர்களை தடுத்து விடமுடியாது என அவர்கள் நம்புகின்றனர். இந்த வீண் முயற்சியால் இயற்கையின் செல்வம் அழியக் கூடாதென அவர்கள் விரும்புகிறார்கள்.

### தந்தைக்கும் மகனுக்கும் நோபல் பரிசு!

ஒரே பொருளைப் பற்றி இரு விஞ்ஞானிகள் நேர் எதிர்மாறான உண்மைகளைக் கண்டுபிடித்து இரு வருமே நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

ஜே. ஜே. தாம்ஸன் என்ற விஞ்ஞானி தமது ஆராய்ச்சியின் மூலம் "மின் அணு"க்கள் என்பவை சிறு சிறு துணுக்குகள் என்று கண்டு அதற்கான நோபல் பரிசை 1906ஆம் ஆண்டு பெற்றுர். ஆனுல் ஜார்ஜ் தாம்ஸன் என்பவர் "மின்னணுக்கள்" என்பவை சிறு துணுக்குகள் அல்ல என்றும் அவை 'அலைகள்'' என்றும் நிரூபித்து அதற்கான நோபல் பரிசை 1937ஆம் ஆண்டு பெற்றுர். இதில் மற்றோர் ஆச்சரியமென்னவெனில் முதலில் பரிசு பெற்றவர் தந்தை. பிறகு அதைத் தவறு என்று நிரூபித்துப் பரிசு பெற்றவர் அவருடைய மகன்.

ச. கருணுமாறன்
யாழ்ப்பாணக் கல்லூரி

### ஒரே நாளில் மூன்று ஆட்சி

ஒரே நாளில் மூன்று அரசாங்கங்களுக்குள் மாறியபெருமை பிரான்ஸில் 'டன்கிவ்' குக்கு உண்டு. ஜூன் 28, 1658 அன்று காலை ஸ்பானிஷ் வசம் இருந்தது. நண்பகல் போரில் அது பிரெஞ்சு வசமாயிற்று. மாலையிலோ போரில் இங்கிலாந்து வெற்றிபெற்று அவர்கள் கைக்கு மாறியது.

# ஞாயிறு மஞ்சரி

## விசித்திர பழக்கங்கள்

**100 கோடி செருப்பு**

பாகிஸ்தானிலுள்ள குக வட்டவை கண்டமுகமதுகான் விதவிதமாக செருப்புகள் அணிவார். வெவ்வேறு விதங்களில் இவரிடம் 100 கோடி செருப்புகள் இருந்தன.

**ஒரே ஒரு முறை.....**

இங்கிலாந்து பிரபுவான பிரான்ஸிஸ் ஹென்றி கொட்டன் என்பவர் ஒவ்வொரு சோடி செருப்பையும் ஒரே ஒரு முறைதான் அணிந்தார்.

**எந்நேரமும் நீரில்**

இங்கிலாந்து பிரபுவான மாத்யூ ராமின்சன் எந்நேரமும் நீர்த்தொட்டியே கதியெனக் கிடந்தார். குளியல் தொட்டியில் கிடந்தவாறே உண்டார், வேலைகளைச் செய்தார். விருந்தினர்களையும், நண்பர்களையும் அந்த நிலையிலே வரவேற்றுர்.

**ஜோடிப் பொருத்தம்**

உலகத்திலே அதிக பருமனுன பெண்கள் எகிப்து நாட்டில் தான் அதிகம்.

அந்நாட்டு மொத்த பெண்கள் தொகையில் 63 சத விகிதம் மிகவும் பருத்தவர்களாக இருப்பார்கள். எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் 80 சதவீத மானபெண்கள்இப்படித்தான்.

ஆண்கள் மிகவும் ஒல்லியாக இருப்பார்கள். மக்கள்தொகையில் 14 சத வீதமான ஆண்கள் பருமனுக இருப்பார்கள். ஆண்கள் நல்ல உயரம்; நீளமான மூக்கு. திருமணத்தில் ஜோடிப்பொருத்தம் பார்ப்பது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

### 1868-ம் ஆண்டு செய்தி இது!

1868ல் நியூயோர்க் பிரபல பத்திரிகை ஒன்றில் வெளிவந்த ட பரப்பான செய்தி:

மூடநம்பிக்கைகள் ஒழிக, மனிதக்குரலை உலோக கம்பி ஒன்றில் அனுப்புவதாகவும், அதன்மூலம் பேச முடியும் என்றும் அதற்கு டெலிபோன் என்றும் பெயர் என்றும் சொல்லி மக்களை ஏமாற்றிய ஒரு கூட்டத்தை இன்று பொலிஸ் நியூயோர்க்கில் கைது செய்தார்கள். உலோக கம்பி, பட்டரி கருவிகள் என்றெல்லாம் இவர்கள் சொல்லி ஏமாற்றிய வெற்று சாதனங்களை கைப்பற்றப்பட்டன. மூடநம்பிக்கைகளைக் கூறி விஞ்ஞானம் என்று ஏமாற்ற முற்பட்ட இவர்களைக் கடுமையாகக் கண்டித்தது அரசு.

## சிறுகதை

# பாதை மாறிய பயணங்கள்

க. நளாயினி

வேகமாக வந்த பஸ் அரவிந்தனை இறக்கிவிட்டு புறப்பட்டது. மனத்தில் எண்ணச்சுமைகளும், கையில் பொருட்களின் சுமையுமாக பஸ்ஸிலிருந்து இறங்கினான் அரவிந்தன். எப்போ வீடு செல்வோம் என்று ஆவலாக வந்த அவனுக்கு சிறிது ஏமாற்றமளித்தது மழை. சிறிதுநேரம் அருகில் இருந்த கடையொன்றினுள் நின்று கொண்டான். முல்லைத்தீவில் ஆசிரியரான அவன் பாடசாலை விடுமுறை விட்ட அன்றே யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்டுவிட்டான். அத்தனை ஆவல். மழை இலேசாகத்தான் தூறிக்கொண்டிருந்தது. பொருட்படுத்தாமல் விரைவாக நடந்தான்.

இத்தனை ஆவலாக வந்த அவனுக்கு வீடு பூட்டிக்கிடந்தது வேதனையையும் ஆத்திரத்தையும் வரவழைத்ததோடு ஏமாற்றமாகவும் இருந்தது.

"ராதா" என உரக்க கூப்பிட்டான். வீடு முழுவதும் அதிர்ந்ததே தவிர, பதில் இல்லை. பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு எங்கேதான் போய்விட்டாளோ? கோபம் ஒரு புறமும், களைப்பு மறுபுறமும் அவனை விரட்ட எல்லாவற்றையும் போட்டுவிட்டு அருகிலிருந்த கதிரையில் பொத்தென இருந்தான்.

ரீப்போவின் மீது வைத்திருந்த கடிதம் காற்றிற்கு இலேசாக சலசலத்ததைக் கேட்டு கண்விழித்தான். பாய்ந்து அதனை எடுத்து படித்தவனுக்கு தான் எங்கே நிற்கிறேன் என்ற நினைப்பே இல்லாமல் போய்விட்டதில் ஆச்சரியமேயில்லை. மின்னல்! இடிமுழக்கம்! புயல்! உலகமே சுற்றியது.

"நானும்பிள்ளைகளும் அப்பா வீட்டை போகிறோம். உங்கள் சிறிய வீட்டில் இனிமேலும் வாழமுடியாது. எங்களை தேட வேண்டாம் மன்னிக்கவும்.

— ராதா"

அடிப்பாவி உன்மேல, பிள்ளைகள் மேலெல்லாம் எவ்வளவு அன்பாக இருந்தேனே. குடும்பத்துக்கெல்லாம் எவ்வளவு பாடுபட்டேன். உனக்கு எப்படி மனது வந்தது? சீ! நீ... நீ... அரவிந்தனுக்கு வார்த்தைகள் தடுமாறின.

எப்படி நான்இனி வெளியால தலைகாட்டுவது. இவ்வளவு நாளா நான் கஷ்டப்பட்டதையெல்லாம் ஒரு சொட்டு நன்றிகூட இல்லாமல் உதறிப்போட்டுப்போக எ...ப்...ப...டி முடிந்தது. நீ தான் உன் அப்பா வீட்டை போறதெனின் ஏன் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டுபோவான். மூன்று பிள்ளைகளுமேசிறுசுகள். விபரம் எதுவுமே தெரியாது. பிள்ளைகளின் எதிர்காலம், அவனது கற்பனைக்கோட்டைகள் எல்லாவற்றையும் தூள்தூளாக்கிப்போட்டாளே.

நாட்கள் வாரங்களைப் பிடித்தன. விடுமுறைக்கென வந்தவன் போராட்டங்களுக்கு மத்தியில் சிக்கினான். இதற்கிடையில் உறவுக்காரர்கள் அக்கம் பக்கம் என ஊர் முழுக்க செய்தி பரவிவிட்டது. வெளியில் தலைகாட்டவே பெருத்த அவமானமாக இருந்தது. பிஞ்சு முகங்கள் நிழலாடிக்கொண்டிருந்தன. சாப்பாடே இறங்க மறுத்தது.

"என்ன அண்ணன் இப்படி நீ இருந்தால் என்ன செய்வது? ஏதோ செத்தவீடு மாதிரி யெல்லே இருக்கிறாய். இப்படிப்பட்டவளோடு நீ வாழ்றதிலையும் பார்க்க இப்படி இருக்கிறது எவ்வளவோ மேல். பிள்ளைகளை வேணுமெண்டால் கூட்டிக்கொண்டு வாவன்" தங்கை கௌரி பேசிக்கொண்டிருந்தாள்.

வாரங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தது வழக்குப் போட்டு பிள்ளைகளையாவது அவளிடமிருந்து பிரிக்கவேண்டும். இப்படி குடும்பத்தைப் பிரிந்து போறவளிற்கு பிள்ளைப் பாசம் எங்கிருந்து வரும். வழக்கு போடுமுன் நேரேயே ஒரு முறை கேட்டுவிட்டால் என்ன.

அவனது மனவேகத்திற்கு தகுந்தமாதிரி பஸ்ஸினால் செல்லமுடியவில்லை. அவனது கற்பனைகள் கடிவாளம் இல்லாத குதிரைபோல் பறந்தது. அவன் கடந்து வந்த பழைய சுவடுகளை நினைத்துப்பார்த்தது.

எட்டுவயதிற்குள் தகப்பனை இழந்து தாயுடனும், இரு தங்கைகளுடனும் வாழ்க்கையோடு எதிர்நீச்சலடித்து வாழ்ந்தவன். இரு மாடு இழுக்கவேண்டிய வண்டியை ஒரு மாட்டினால் தனித்து எப்படி இழுக்க முடியும். என்ன செய்வது நாலு ஜீவன்களின் வயிறுகழுவியாக வேண்டும், இதற்குள் மூன்று பேர் படித்தாக வேண்டும். இந்தக்காலத்தில் படிக்காவிட்டால் யார்தான் மதிக்கப்போகிறார்கள்.

பாடசாலைக்கென ஒரேயொரு உடுப்பு. வீட்டில் மண்ணெண்ணெய் விளக்கில் படிப்பு, மண்ணெண்ணெய் தீர்ந்தாலோ தெருவிளக்கில்தான், எத்தனையோ நாள் அரைவயிறுச்சாப்பாடு, அக்கம் பக்கத்தார் உறவுக்காரர் என கடன்வாங்காத இடமே இல்லை. இதற்கெல்லாம் அம்மா என்ன பண்ணுவா. பாவம் அவவின் அன்பு மட்டும் இல்லாவிட்டால் நாம் வாழ்ந்திருக்கவே முடியாது. அப்பாவின் சொற்ப பென்ஷன் வந்தது. அத்தோடு அவபட்ட பாடு. அந்த ஊரில் இருக்கிற பல வீடுகளில் வேலை செய்து எவ்வளவு பாடுபட்டிருப்பா. எங்களுக்காகவே உழைச்சு தேய்ஞ்சு போய்ட்டா.

அவனும் படிப்பில் சுமார்தான். பண்ணிரண்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டான். அதன் பிறகு பொறுப்பு அவன்மேல் விழுந்தது. வேலை செய்யத் தொடங்கினான், இரவு பகலாக உழைத்தான். ஒரு தங்கையை மணமுடிக்க விரும்பி முன்வந்தான் அவனது உயிருக்குயிரான பால்ய சிநேகிதன் கண்ணன்.

பஸ் ஒரு பஸ்தரிப்பில் நின்று மெதுவாகப் புறப்பட்டது.

இதற்கிடையில்பலபிரச்சனைகளுக்கு மத்தியில் இழுபறிபட்டுக்கிடந்த காணி பறிபோனது. பெரிய சிக்கலுக்குள் அகப்பட்டுப்போன அவர்களுக்கு தகப்பனின் நண்பர் ஒருவர் தனது ஊரில் ஒரு 'சிறியவீட்டை' வாடகைக்கு கொடுத்தார்.

உயிருக்கும் பாசத்திற்கும் இடையில் ஊசலாடிக்கொண்டிருந்த தாய் போய்ச்சேர்ந்துவிட்டாள். தான் தனியாக் கட்டப்பட்டதை உணர்ந்தான். வலதுகை இல்லாதது போல் இருந்தது மற்றவளை தூரத்து உறவினரான விசயிடம் கரம்பிடித்துச் கொடுத்தான்.

தற்போது தன்னை பார்த்தான். சூழவுள்ளவைகளைப் பார்த்தான்.

பஸ் ஒருகணம் 'பிறேக்' போட்டு நின்று புறப்பட்டது.

சுமைகள் ஒருபுறம் குறைந்தாலும் தான் இனி என்ன செய்வது என ஏங்கினான். என்ன செய்வது அவனும் இளைஞனாயிற்றே இச்சந்தர்ப்பத்தில்தான் கண்ணன், ராதாவை மணமுடித்து வைத்தான். ராதா செல்வந்தர் ஒருவரின் ஒரேமகள். மாளிகை போன்ற வீடு, வசதிகள் பல.

பஸ் பல பேரை இறக்கிவிட்டு கடைசி இடத்தை நோக்கிப் புறப்பட்டதை உணர்ந்த அரவிந்தன் இறங்குவதற்கு தயாரானான்.

அந்தப் பெரிய வீட்டின் கதவைத் தட்டினான்.

கதவு திறந்தது. மாமனார் நின்றார்.

"நான் வந்தது ஏன் என்று தெரிஞ்சிருக்கும்"

"தெரியும்"

"பிள்ளைகளை மட்டும் நான் கூட்டிக்கொண்டு போறன்" என்றான் அரவிந்தன்.

"உங்களிடம் ஒப்படைக்க எனக்கோ, ராதாவிற்கோ இஷ்டமில்லை." ஒரு கணம் அதிர்ந்து நிமிர்ந்தான் அரவிந்தன். தலை சுற்றியது. "வழக்குப் போடலாம். ஆனால் கோடு, வழக்கு என்று திரிய எனக்கு விருப்பமில்லை. நானே வளர்க்கிறேனே."

இதற்குள் எங்கிருந்தோ வந்த மூத்த மகன் சேகர் 'அப்பா' என்றபடி அரவிந்தன் கழுத்தை கட்டிக்கொண்டான். "அப்பா நங்கள் உங்களோடை வரப்போறம். இங்கேயெல்லாம் ஒரு மாதிரியா இருக்குப்பா." அழுதான் அவனை ஆறுதலாக அணைத்து கண்ணீரை துடைப்பதைத் தவிர வேறொன்றும் அவனால் செய்ய முடியவில்லை.

"உங்களின் ஆசைகளுக்கெல்லாம் பிள்ளைகளை பலியிட வேண்டாமென்று நினைக்கிறேன்."

"ம்"

"அதாலதான் பிள்ளைகளை கூட்டுக்கொண்டு போகப்போறன். சின்னப்பிள்ளைகள் எண்டாலும் பரவாயில்லை. இவ்வளவு நாளாக கஷ்டப்பட்ட எனக்கு இனியும் கஷ்டப்படுறது பெரிய சுமையில்லை."

இவ்வளவு நேரமும் எங்கேயோயிருந்த ராதா கண்ணிமைக்கும் நேரத்திற்குள் மகனை அவனது பிடியிலிருந்து பறித்தெடுத்தாள்.

"உங்களுக்கு சுமையாயும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இனி நானும் பிள்ளைகளும் வாழப்போறது அப்பா வீட்டில்தான் உங்கள் வீட்டிலில்லை. பிள்ளைகள் உங்களோடை வளர்றதுக்கு நானும் சம்மதிக்கமாட்டன்."

'அப்பா' என பிள்ளைகள் அலறின. சேகர் அவனது காலைக்கட்டிக்கொண்டான்.

அரவிந்தின் கண்கள் கலங்கின.

'சேகர்' என்றபடி அணைத்துக்கொண்டான்.

'வாடா போகலாம்' அவனை இழுத்துக்கொண்டுநடந்தான்.

"டேய் சேகர் உனக்கு எவ்வளவு துணிவு. வாடா இங்கே" இழுத்தாள் ராதா.

அடுத்த அடியை வைக்க மனமில்லாமல் படபடவென நடந்துசென்று விட்டான் அரவிந்தன்.

சேகர், 'அப்பா அப்பா' என கத்துவது கேட்டது.

நெடுநேரம்வரை மூன்று பிள்ளைகளின் முகங்களும், அலறல் ஒலிகளும் அலைமோதிக் கொண்டிருந்தது. 'குடும்பத்திற்கென எவ்வளவு பாடுபட்டன். பகல் முழுக்க பாடசாலையிலும் பின்னேரங்களில் ரியூசன் என்றும் ஓடி ஓடி உழைத்தேன். என்ன குறை வைத்தேன். மெழுகுவர்த்தியாக உருகி ஒளி கொடுத்தேனே.

'இதென்ன கட்டுக்கள் எங்கேயேனும் மோதிவிட்டேனோ? ஆ! என்ன இது உடம்பெல்லாம் ஒரே வலி.

நாட்கள் கழிந்தன. ஆஸ்பத்திரியில் தன்னை பார்க்க ஒருவரும் வரமாட்டார்கள் என்று தெரிந்தும் மற்ற நோயாளிகளிடம் போவோர் வருவோரை பார்த்துக்கொண்டிருப்பான். அன்றும் அப்படித்தான் பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணனும், தங்கைகளும் சோகமே உருவாக ஓடிவருவது அரவிந்தன் கண்களில் தட்டுப்பட்டது.

அதிர்ச்சி, ஆனந்தம், வேதனை, துக்கம் எல்லாவற்றையுமே அனுபவித்தான்.

ஒருவராலும் எதுவுமே பேச முடியவில்லை.

நால்வரும் மௌனமாகவே அழுதீர்த்தன.

"லொறியில் மோதுப்பட்டு ஆஸ்பத்திரியில் என்று தெரிந்தவுடன் 'இங்கு வாறம். அண்ணை ஏண்ணை இப்படி உன்னையேமாத்திக்கொண்டாய்?" தங்கைகள் அழுதனர். கண்ணன் தனது உயிர் நண்பனின் நிலையை எண்ணித்தவித்தான்.

சிந்தித்தபடி இருந்த கண்ணனை, அரவிந்தனின்முனகல் ஒலி விழிப்படையச் செய்தது.

தட்டுத்தடுமாறி வாயைத் திறந்தான் அரவிந்தன். 'கண்ணா, பிள்ளைகளை நான் கடைசியாக ஒருமுறை பார்க்க ஆசையாயிருக்கு. தயவுசெய்து கூட்டிக்கொண்டு வாடா. இனியும் என்னால் வாழமுடியும் என்று நினைக்கேல்ல."


உயிருக்கு உயிரான அண்ணன் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் துக்கம் நெஞ்சையடைக்க பரிவுடன் கவனித்துக்கொண்டனர் தங்கைகள்.

மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்தான் கண்ணன்.

ஆனால், அரவிந்தன் தனது புதிய பயணத்தை தொடங்கி விட்டான் என்பது தெரிந்திருக்கவில்லை, அப்போதுதான் அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். பதறியடித்துக்கொண்டு ஓடிவந்த பிள்ளைகள் 'அப்பா' என்றபடி கதறினார்கள். குழந்தைகளின் குரல் ஆஸ்பத்திரி முழுதும் எதிரொலித்தது.

எல்லோர் முகத்திலும் சோகம் கப்பியிருந்தது. ஆனால் அவன் முகத்தில் மட்டும் எல்லோரையும் வென்றுவிட்ட திருப்தி நிலவியது.

[யாவும் கற்பனை]



## நாட்டுக்கு நாடு

ஸச்சி

**★ சிங்கப்பூர்**

ஒருவர் இறந்த பின்னர் தனது சிறுநீரகத்தை இன்னொருவர் பிழைப்பதற்கு தானமாக கொடுக்க முன்வருபவர்களுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் அவர் இறந்தபின்னர் அவரது மரணச் செலவுக்கு ஐநூறு டொலர்களை நன்கொடையாக வழங்கிவருகிறது.

**★ இங்கிலாந்து**

இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையின் பெயர் "குப்பை", இப்பத்திரிகை நகரில் போடும் குப்பைகளை எப்படி அகற்றுவது? எப்படி இதனைப் பயன்படுத்துவது என்பது பற்றி ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுவதுதான் இதன்பணி.

**★ ஜேர்மன்**

ஜேர்மனியிலுள்ள லிப்சிக் நகரில் நூற்றி நாற்பது வருடங்களாக ஒரு தமிழ் நூலகம் இயங்கிவருகின்றது. இந்நூலகம் 1850ம் ஆண்டு ஆரம்பிககப்பட்டது. ஒரு கோடி தமிழ் நூல்கள் இங்கு பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

**★ சுவிச்சர்லாந்து**

சாயும் கோபுரம் என்றால் பாரிஷ் மாநகரில் இருக்கும் கோபுரம்தான் நினைவுக்கு வரும். ஆனால் சுவிச்சர்லாந்தில் இருக்கும் ஒரு கோபுரம் நூற்றி அறுபத்தைந்து ஆண்டுகளாக சாய்ந்து நிலைத்து நிற்கிறது. இக்கோபுரம் பூகம்பத்தால் சாய்ந்துவிட்டதாகமூதாதையர்கள் தெரிவிக்கிறார்கள்.

## வரப்பெற்றோம்

**குமரன்**

மார்ச் மாத இதழ் கிடைத்தது. 'தெற்காசியப் பெண்கள் பிரச்சனை', 'முதலாளித்துவமும்; பெண்களின் குறைந்த கூலியும்' போன்ற கட்டுரைகள் சிறப்பாக உள்ளன. விலை ரூபா 4/-

**நான்**

உளவியல் மஞ்சரியின் பதினாறாம் சிறப்பு மலர் கிடைத்துள்ளது. சிறு கதைகள் உளவியற் கட்டுரைகள், பல துணுக்குகள் பலவற்ரை அலங்கரிக்கின்றன. மனித உள்ளத்தின் பிரச்சனைகள் சிலவற்றிற்கு ஆறுதல் தரவல்லன அவை. விலை ரூபா 5/-

# மாணவர் மன்றம்

## எரிவெள்ளிகள்

நாம் சில சமயங்களில் வானத்தில் வெளிச்சம் எரிந்து கொண்டு வந்து மறைந்து போவதைக் காண்கின்றோம். இது எரி வெள்ளிகள் எனப்படும். இதைப் பார்த்து சிலர் இது தீயசகுனம் என்பர். கண்டவர் உடன் பால் மரத்தைப் பார்க்கவேண்டும் என்பர் முதியோர். உடைந்துபோன வால்வெள்ளியின் துண்டுகள் பூமியை நோக்கி அதிவேகத்தில் வருதலால் அவை பூமியைச் சுற்றியுள்ள வாயுவோடு உராஞ்சிச் சூடேறி எரிகின்றது. அவை விநாடிக்கு 30 முதல் 50 மைல்கள் வேகத்தில் வருகின்றன. நிலத்தை அடையமுன் அவை பெரும்பாலும் எரிந்துவிடுகின்றன. எரிவெள்ளிகள் விழுந்து பூமியைச் சுற்றியிருக்கும் காற்றோடு தாக்குண்ணும்போது சூடடைந்து எரிகின்றன. அப்போது வெளிச்சமுண்டாகிறது. இவை எரிந்துபோகாமல் பூமியில் விழுவதுமுண்டு. எரி வெள்ளி பல தொன் நிறையும் உடையது. ஒருமுறை வட அமெரிக்காவில் அரிசோனா என்னுமிடத்தில் எரி வெள்ளி விழுந்தமையால் உண்டான ஒரு துவாரமிருக்கிறது. அது 600 அடி ஆழமும் 3 மைல் சுற்றளவும் உள்ளது. கிரீன்லாந்திலிருந்து இலண்டன் நூதனப் பொருட்காட்சிக்கு எடுத்துச்செல்லப்பட்ட வானக்கல் 36½ தொன் பாரமுள்ளது. எரி வெள்ளி விழும்போது ஒலி அலைகளை உண்டாக்குகின்றது. அவற்றால் இடிமுழக்கம் போன்ற சத்தமும் உண்டாகும். வானக்கல்லில் நிக்கல், குரோமியம், மக்னீசியம், இரும்பு போன்ற உலோகங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் பூமியின்மீது ஏறக்குறைய ஆயிரக்கணக்கில் விண்கொள்ளிகள் விழுகின்றன. இதனால் பூமியின் பாரம் ஆண்டுதோறும் இருபதாயிரம் தொன் அதிகரிக்கப்படுகின்றது.

சி. யசோதரன்
யாழ். இந்துக்கல்லூரி

## பொது அறிவு

### சமூகவியல்

புவியீர்ப்பு விதியைக் கண்டுபிடித்தவர் யார்?
நியூட்டன்

பால் பதனிடும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
லூயி பாஸ்ரர்

டைனமோவைக் கண்டு பிடித்தவர் யார்?
பரடே

டி. டி. ரி., மலேரியா பற்றிய ஆய்வாளர்கள் யார்?
றேஸ்

இருதய மாற்றுச் சிகிச்சையைக் கண்டு பிடித்தவர் யார்?
கிறிஸ்டியன் பெர்னுட்

இன்சுலினைக் கண்டுபிடித்தவர் யார்?
கிருன்ற் பன்ரிங்

அம்மைப்பால் குத்துதலைக் கண்டுபிடித்தவர் யார்?
எட்வேட் ஜென்னர்

கிராமபோனைக் கண்டு பிடித்தவர் யார்?
தோமஸ் அல்வா எடிசன்

யோ. றேசான்
மானிப்பாய்.

## உங்களுக்குத் தெரியுமா?

| விஞ்ஞானிகள் | | கண்டுபிடித்த கருவிகள் |
|---|---|---|
| தாமஸ் அல்வா எடிசன் | — | மின்சார பல்ப் |
| சார்லஸ்ஹெச்டௌன்ஸ் | — | லேசர்கதிர் |
| எலிஸா ஜி ஒடிஸ் | — | லிப்ட் |
| ஜேம்ஸ் பெக்லே | — | இயந்திரத் துப்பாக்கி |
| ஏ. ஜே. கர்னெரின் | — | பாரசூட் |
| வால்டர்ஹன்ட் | — | குண்டூசி |
| ஹோன்ஸ்லிப்பர்ஸே | — | தொலைநோக்கி |
| ஆர்வில்ரைட்வில்பர்ரைட் | — | விமானம் |
| டேவிட்புஸ்னெல் | — | நீர்மூழ்கிக் கப்பல் |
| அலெக்சாண்டர் கிரஹம்பெல் | — | தொலைபேசி |
| லீவர் | — | மின்விசிறி |
| ஆடிமார்ஸ் | — | ரயான் [செயற்கைப்பட்டு] |
| மோர்ஸ் | — | தந்தி |
| ராண்டஜன் | — | எக்ஸ்ரே |
| ஷோல்ஸ் | — | தட்டச்சு |
| ஹையாட் | — | செல்லுலாய்ட் |
| டீசல் | — | டீசல் இயந்திரம் |
| மார்க்கோனி | — | ரேடியோ |
| ஸ்ட்மென் | — | புகைப்பட கலர் பில்ம் |

ப. திவாஜினி,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## குயில்

குழந்தைகள் நாம் மனம் மகிழ்ந்து
கூ கூ எனக் கூவிவிட்டால்
கூ கூ, கூ கூ என்றே நீயும்
கோபம் கொண்டு கூவுவதேன்?
காகக் கூட்டில் நீ இருந்து
காகா என்று கத்தாமல்
கூ கூ என்று கூவித்தான்
குட்டு வாங்கிப் பறந்தனையோ

பச்சைக் கிளியாய் நீ இல்லை
பாலும் பழமும் தருவதற்கு
கையை வீசிக் கலைப்பதற்கு
கரையும் காகமாய் நீ இல்லை
கருமை நிறமாய் இருந்திடினும்
இனிய குரலைக் கொண்டுள்ளாய்
இதனால் உன்னைக் குயிலென்று
என்றும் நாம் உணர்கின்றோம்.

— ச. வான்மதி
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

## பிராணிகளின் சீவியகாலம்

| | | |
|---|---|---|
| ஈசல் | — | 1 நாள் |
| நத்தை | — | 2½ நாள் |
| வண்ணாத்திப்பூச்சி | — | 3½ வாரங்கள் |
| ஈ | — | 5 மாதங்கள் |
| சுண்டெலி | — | 6 வருடங்கள் |
| அணில் | — | 6 வருடங்கள் |
| முயல் | — | 10 வருடங்கள் |
| புறா | — | 20 வருடங்கள் |
| சிங்கம் | — | 35 வருடங்கள் |
| தேரை | — | 40 வருடங்கள் |
| கரடி | — | 50 வருடங்கள் |
| காகம் | — | 100 வருடங்கள் |
| ஆமை | — | 350 வருடங்கள் |
| திமிங்கலம் | — | 500 வருடங்கள் |

சு. சசிதரன்
யாழ். இந்துக்கல்லூரி

# மங்கையர் மஞ்சரி

### ● "ரொட்டி" அன்ரி

தென்னாபிரிக்காவில் டர்பன் நகரில் வசித்துவரும் சமூக சேவகி அஞ்சலையம்மா ரெட்டி ஏழைகளுக்கு இலவசமாக "ரொட்டி" வழங்கி வருகின்கின்றார். இதனால் அவரை "ரொட்டி" அன்ரியென்றே எல்லோரும் அன்பாக அழைப்பதுண்டு. அவர் இந்தப் பணியை இருபத்தொரு ஆண்டுகளாக செய்து வருகின்றார். திருமதி ரொட்டி தென்னாபிரிக்காவிலுள்ள சிவசக்தி ஆலயம், நேட்டல் இந்திய கண்பார்வையற்றோர் சங்கம், இராமகிருஷ்ண சிறுவர் இல்லம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர். இவரது சமூகப் பணியினால் ஏழைகளின்வாழ்வு உயர்ந்துள்ளது.

### ● "டயனா" வைப் பார்க்க படையெடுக்கிறார்கள்

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் மனைவிக்கு வயது 24. இரண்டுகுழந்தையின் தாயார். இவரின் அழகைப் பற்றியும், அவருடைய பழக்க வழக்கங்கள் பற்றியும் மேலை நாட்டுப்பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதிவருகின்றன. இவற்றைப்படிக்கும் மக்கள் டயானாவை ஒருதரம் பார்க்க துடிக்கிறார்கள். இதனால் பலர் தங்கள் ஆசையை அடக்க முடியாமல் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கிலாந்து அரசுக்கு ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிட்டுகிறது.

### ● "நான்சி"க்கிழவி

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றீகனின் மனைவி நான்சி ஒருகாலத்தில் நடிகையாக இருந்தவர். மேடைக்கச்சேரியிலும் புகழ்பெற்றார். இப்போது "நான்ஸி" கிழவியாகிவிட்டார். ஆனாலும் தன்பழைய நினைவுகளை அவரால் மறக்கமுடியாமல் தடுமாறுகிறார். சமீபத்தில், வாஷிங்டனில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது பலரது வேண்டுகோளுக்கமைய "நான்ஸி" ஆட்டம் ஆடிப் பாடி மகிழ்வித்தார்.

— அனுஷியா

### ● "சோனியா" தன் கணவரைப்பற்றி

"எனதுகணவரின் அழகைக் கண்டு நான் மயங்கவில்லை அவருடைய பண்பான பழக்க வழக்கத்தில் மனதைப்பறி கொடுத்தேன். கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதுதான் அவரைச் சந்சந்தித்தேன். அவர் உண்மையிலே அழகானவர். அவரது வெளி அழகைக்கண்டு நான் மயங் வில்லை. அவருடைய பண்புதான் என்னைக்கவர்ந்தது. புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்தவராயினும் தற்பெருமையோ, ஆணவமோ கிடையாது. மிகவும் மென்மையானவர். இதனால் இருவரும் இணைந்தோம். இன்றும் மகிழ்ச்சியாக வாழ்கின்றோம்" என்று கூறியுள்ளார்.

### ● பார்வை இழந்தும் பறக்கிறார்

இங்கிலாந்தைச் சேர்ந்த கரன் என்ற பெண்மணிக்கு கடந்த பத்துவருடங்களாக பார்வை இல்லாமல் போய்விட்டது. விமானம் ஓட்டுவதில் வல்லவரான இப்பெண்மணி பார்வை போன பிறகும் தனது முயற்சியைக் கைவிடவில்லை. தீவிரப் பயிற்சிக்கு பிறகு இப்போது கண்தெரியாத நிலையிலும் வானத்தில் வட்டமடித்து சாதனை செய்கிறார்.

### ● கட்டுப்பட்ட கணவன்

முன்னாள் இந்திய அமைச்சர் வை. பி. சவானுக்குகுழந்தைகள் மீது கொள்ளையாசை. குழந்தைகள் இல்லங்களுக்கு அடிக்கடி செல்லுவார். ஆனால் அவருக்கு குழந்தைகள் இல்லை, மனைவி சுவாச நோயால் அவதிப்பட்ட போது, மனைவி கருத்தரித்தால் ஆபத்து என அறிவுறுத்திய மையபல் கடைசிவரை அதற்கு கட்டுப்பட்டு வாழ்ந்தார்.

# கணவனை இழந்தும் திலகம் வைத்த பெண்மணி

செல்வி சாந்தினி கந்தசாமி

நெருப்புடன் போராடுபவர்கள் பெண்கள் என்று கீழை நாட்டுப் பெண்களை மேலை நாட்டவர் கருதிய காலம் ஒன்று இருந்தது. வேதகாலத்தில் இருந்து இன்றுவரை பெண்கள் மரியாதைக்குரிய இடத்தை வகித்து வந்திருக்கின்றனர். உபநிடதங்களில்சில பெண்களால் எழுதப்பட்டவை இது ஒன்றே. பெண்கள் எந்தளவிற்கு அறிவுமிக்கவர்களாகவும், சமூக அங்கீகாரம்பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதற்குப் போதுமான சான்றாகும்.

இந்திய வரலாற்றிலே பல வகையிலும் சாதனை புரிந்ததோடு பொது வாழ்க்கையிலும் சிறப்பாகப் பணியாற்றிய மோதிலால் நேருவின் மகளான விஜயலட்சுமி பண்டிட் பெண்கள் உயர்வில் மிகவும் அக்கறைகொண்டுஉழைத்தவர். இந்திய விடுதலைக்காகப் பல தடவைகள் சிறை சென்றிருக்கின்றார்.

கஷ்மீரப் பிராமணப் பெண்ணான இவர் சீதாராம பண்டிட் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டு இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தார். இப் பெண்மணிக்கு தமிழ்க் கலாசாரத்தில் அழுத்தமான ஈடுபாடு இருந்தது. பல பெண்கள் விதவையானதும் திலகம் இட்டுக்கொள்வதை நாம் இன்றும் காணக் கூடியதாக உள்ளது. ஒரு விதவைப் பெண் திலகமிட்டுக் கொண்டால் சமுதாயத்தில் அவளைப்பற்றிய கணிப்பு விதம்விதமாய் அமையும். இத்தகைய சமுதாய அமைப்பில் வாழ்ந்த விஜயலட்சுமி கணவனை இழந்த பின்பும் திலகமிட்டுக்கொள்வதைப் பழக்கமாகக்கொண்டிருந்தார். மாஸ்கோவில் இவர் இந்தியத் தூதராக இருந்தபோது திலகமிட்டுக்கொள்வதைப் பற்றி அங்குள்ளவர்கள் கேட்டார்கள். விஜயலட்சுமி கொஞ்சமும் தயக்கமில்லாமல் அதற்குப் பதில்சொன்னார். "ஒரு பெண்ணின் அழகை அவள் இட்டுக் கொள்ளும் திலகம் சிறப்பித்துக் காட்டுகின்றது" என்று சொன்னார்.

## பேச்சுக்கலை அவசியமாகும்

சம்பாஷிக்கும் கலையில் திறமைசாலிகளாக இருப்பவர் தான் இவ்வுலக வாழ்க்கையில் இன்பகரமாகவாழ்ந்து வெற்றி காணமுடியும். தம் கருத்தை நிலைநாட்டவும், பிறர்தம் கொள்கையைச் சரியென்று ஒத்துக்கொள்ளவும். வேண்டுமானால் பேச்சுத்திறமை அவசியமாகும். பேச்சுத் திறமை மிக்கவர்கள் தங்கள் பேச்சுத் திறமையால் உலகத்தவரையே தன்வழிக்குகொண்டுவராலாம்

இக்கலையில் ஆண்களைப் போன்று பெண்களும் சிறந்து விளங்கவேண்டியது இன்றியமையாதது. வீட்டையும், வெளியுலகத்தையும் விளங்கவைக்கவேண்டிய மகத்தான பொறுப்பு பெண்களுக்கு இருக்கிறது. எனவே படித்த பெண்களானாலும்சரி, படிக்காதவர்களானாலும் சரி இன்று தன் வீட்டிலும், வெளியிலும் தானே பேசித் தன் காரியங்களைச் செய்தல்வேண்டும். சந்தர்ப்பத்திற்கேற்றாற் போல் பேசி வேலைகளை சிரமமின்றி செய்துகொள்ளுதல் அவசியமாகும்.

— ஜெயா

# புல்லுக்கு வந்த புகழ்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தொழிலாற் சீவியம் நடத்துன்றன. ஆண்துணையற்ற குடும்பங்களும் விவசாயம் போதிய வருவாயைக் கொடுக்காத குடுயபங் ளும் இத்தொழிலின் வருமானத்தாற் சீவியத்தை நடத்துகின்றன. ஆரம்ப காலத்தல் இருந்த பாய்களின் தரம் இப்போது செய்யப்படும பாய்களில் இல்லை. ஏதோ வருவாய் வந்தாற்போதும் என்னும் வியாபார நோக்கத்துடன் செய்கிறார்கள். தொழில் நுட்பங் ளைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அதைப்பற்றி விளககுவோரும் அங்கு யாருமிலலை.

இப்பாய்களுக்கு உபயோகிக்சப்படும் புற்கள் கற்பன் என்னும் இனத்தைச் சார்ந்தன. நெசவுக்குக் 'குறுலோன்' நூலை உபயோகிக்கிறார்கள். ஓரங்களுக்குத் துணியை வைத்து மடித்துத் தைத்துக்கொள்ளுகிறார்கள்.

இப்போது உற்பத்தியாளரின் தேவைக்குப் புல் போதாமலிருக்கின்றது. அதனால் கண்டாவளை, அக்கராயன் தளம், பூநகரி, பறங்கியாறு, வன்னேரி முதலிய இடங்களுக்குப் போய் புல்லை வெட்டி உழவுயந்திரங் ள் லொறிகள் மூலங்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொண்டமானுற்றை அண்டிய நீர்ப்பிடிப்புள்ள இடங்களில் எருமைச்சம்பு என்னும் பெயருடைய ஒரு வகைட்புல் வளருகின்றது. வெளித்தோற்றத்திற்கு கற்பன் புலலைப்போல இருந்தாலும் தண்டின் உட்புறம் துவாரமுடையதாயிருக்கும். அது காய்ந்தால் முறிபக் கூடியது. பாய் உற்பத்தியாளர்கள் இதையும் விட்டுவைக்கவில்லை. இதையும் வெட்டிப் பாய் நெசவு செய்கிறார்கள். இதனால் ஆக்கப்பட்ட பாய்சள் நீடித்த பாவனைக்கு உதவமாட்டா. இது மற்றப்பாயிலும் பார்க்க விலையுங் குறைந்தது. விஷயமறியாதவர்கள் இப்பாய்களை வாங்கி ஏமாற்றமடைகிறார்கள்.

## ஆன்னுஞ செய்ய வேண்டியன

இத்தொழிலை இன்னும் அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டியன சில உள்ளன. வட இலங்கையிலே ஆறு, குளம் முதலிய நீர்நிலைகளையண்டிய இடங்களில் கற்பன் புல்லைப்பரப்பி வளர்க்க வேண்டும். அதனுல் மூலப்பொருள்களின் தட்டுப்பாடு குறையும்.

பாய் உற்பத்தியாளர்களின் கூட்டங்களைக் கூட்டித் தொழில் நுட்பஞ்சம்பந்தமானவிளக்கத்தைக் கொடுக்க வேண்டும். தரமான பாயுற்பத்தி செய்பவர்களுக்கு உதவிகளையும் சலுகைகளையும் அரசாங்கம் வழங்க வேண்டும். சாயமூட்டாத புற்களைக் கொண்டு ஆக்கப்படும்பாய்களுக்கு கரையலங்காரங்களையும் வேறு சித்திரங்களையும் அச்சிட்டு விற்பனைக்கு விட வேண்டும். இவற்றை இலகுவில் நடைமுறைப்படுத்த பாய் உற்பத்தியாளர்களின் சங்கங்களையமைத்துப் பதிவு செய்ய வேண்டும்.

இவ்விதஞ் செய்தால் உள்ளூரில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் இப்பாய்களுக்கு பெரும் வரவேற்புக்கிடைக்கும். இவைகளைச் சமூக சேவையிலார்வங் கொண்டவர்கள், ஸ்தாபனங்கள், அரசாங்கத்தின் குடிசைத் தொழிற்பகுதியினர், மன விருப்போடு செய்ய முன் வந்தால் இத்தொழில் எமது பகுதிக்குப் பொருளையும் புகழையும் தேடித்தரும்,


# SPOKEN ENGLISH

## பேச்சு ஆங்கிலப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற

# Bright Training Centre

## அடுத்த கல்வி முயற்சி

## கடைக்கணக்கு எழுதும் முறை (METHOD OF BOOK-KEEPING)

# தபால் மூலம் கல்வி

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும்.

இன்று நாட்டில் கணக்குப் பதிவாளர் (Book-keeper) கணக்கு லிகிதர் (Accounts Clerk), கணக்குப் பரிசோதகர் (Audit Clerk) ஆகிய வேலைகளுக்குப் பல வெற்றிடங்கள் உள்ளன எமது பயிற்சியினை மேற்கொள்வதன மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

கணக்குப் பதிவியல் துறையில் லண்டன் (London) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருடகால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடனே இப்பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும். இப்பயிற்சியினைத் திறம்படச் செய்து முடிப்பவர்க்குச் சிறந்த தொழிலினைத் தேடித் தரக்கூடிய சிறந்த நற்சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் சுய விலாசத்தையும் எழுதித் தொடர்புகொள்க.

**புது அறிவொளி** விலை ரூபா 5/-மட்டும்

வெளிவந்து விட்டது எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ், பிரபல்ய புத்தகக் கடைகளில் கிடைக்கும். நேரடியாகப் பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

- யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையத்துக்கு அருகாமைலுயிள்ள சகல கடைகளிலும் புது அறிவொளி இதழ் விற்பனைக்கு உண்டு.

**SPOKEN SINHALA**

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப் படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில் மிகமிகப் புதுமையான முறையில்

**'SPOKEN SINHALA'**

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத்தேறலாம்.

**BUSINESS ENGLISH**

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத்திட்டம் இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விணணப்பப்படிவம் எப்படித் தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்ருடப் பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபால் உறையுடன் சுய விலாசத்தையும் எழுதித் தொடர்பு கொள்க.

எமது கல்வி நிறுவனம் அறிமுகப்படுத்தும் மூன்று மாதத்தில் பேச்சு ஆங்கிலம் எனும் பயிற்சியினை இலங்கையில் உள்ள பல பாகத்தினரும் தபால் மூலம் பயின்று பயன் பெற்றுள்ளார்கள். எமது பயிற்சிநெறியானது, மாணவர்களை அறிந்து அவர்களுக்கு இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுவது என்ன என்பதை உளவியல் ரீதியில் ஆராய்ந்து அதன்படி தயாரிக்கப்பட்டதே எமது கல்வி நெறியாகும். எனவேதான் மாணவர்கள் எல்லோரும் மற்றைய பயிற்சிகளை விட பிறைட் பயிற்சி நிறுவன ''ஆங்கில பேச்சு பயிற்சி'' சிறப்பானது எனக் கூறுகிறார்கள்.

முழுக்க முழுக்க மாணவர்களின் நலன் கருதி தயாரிககப்பட்டதே எமது பயிற்சியாகும். இது வரை எம்மிடம் பயின்ற மாணவர்கள் தாம் பெற்ற பலாபலனை மற்றையோரும் பெறவேண்டும் எனக் கருதிப் பலர் தங்கள் சிநேகிதர்களையே அறிமுகப்படுத்தி உள்ளார்கள். அது மாத்திரமின்றி பலர் தாம் பெற்ற இன்பம் (படிப்பு) அதை எம்முடன் பகிர்ந்தும் உள்ளனர். இத்தோடு வேறு பலர் இப் படிப்பை முடித்துவிட்டு எம்மால் அறிமுகப்படுத்தப் பட்ட வியாபார ஆங்கிலம எனும் திட்டத்திலும் இணைந்துள்ளனர். மாணவர்கள் மதிப்பே ஒரு கல்வி நிறுவனத்தின் புகழ் என்றால் மிகையாகாது. அதனை மாணவரிடம் பெற்ற ஒரே நிறுவனம் பிறைட் பயிற்சி நிறுவனமேயாகும்.

**எம்மிடம் 90 நாட்களில் ஆங்கிலம் பயின்ற சிலரின் கருத்துக் குவியல்களை பார்ப்போம்**

1. ஆங்கிலப் பாடத்தின் முக்கியத்துவத்தை எமக்கு வெளியிட்டது பிறைட் றெயினிங் சென்ரர். எல்லோரும் ''காசைக் கட்டி வீணாக ஏமாறப்போகின்ருய்'' என்று கூறினார்கள். தங்கள் பயிற்தி நிலையம் எனது பணத்திற்கு மேலாக ஆங்கில வளத்தை அள்ளித் தந்துள்ளது. 2327

செல்வி கலைவாணி குமாரசாமி
28/3, முரசுமோட்டை, பரந்தன்

2. உங்களுடைய கல்வித்திட்டம் பற்றி என்னுடைய சிபார்சின் பேரில்தான் செல்வி S. ஜெயந்தி என்பவர் உங்களிடம் பயிலுகின்ருர். உங்கள் ஒரு மாத பாடத்திலேயே அவரை நான அறிமுகம் செய்து வைத்தேன். இன்னும் பலரை இக் கல்வித்திட்டத்தில் சேரும்படி கேட்டுக்கொண்டே இருக்கிறேன். 2147 T

செல்வி மேரி யோகராணி
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

15. சர்வதேச மொழிகளில் ஒன்ருன ஆங்கிலத்தை எமக்கு விளங்கக்கூடிய வகையில், இலகுவான முறையில அமைத்துத்தந்த Bright Trainirg Centreன் பணி மேலானது வேறு ஏதாவது பாடத்திட்டம் அறிமுகப் படித்துவதாயின் எமக்கு அறியத்தரவும்.

செல்வி ரஜனி பொன்னம்பலம்
''ராணி பவனம்'',
சேந்தாங்குளம், இளவாலை

16. தங்களது பாடத்திட்டம் எமக்குத் தகுந்த பலன் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம். (1957)

S. Bhavani
New Road,
Karainagar.

17. I have fulfilled the conditions. I am very happy now Because I can read and write English very well now.

Miss T. Chandrka
''Saraswatha Shade'',
Goodshed Road.
Kondavil.

19. தங்கள் கல்வி நிலையத்தில் நானும் ஒரு மாணவியாகச் சேர்ந்து படித்ததில் பெருமை அடைகிறேன். உங்களது ஒவ்வொரு பாடத்தொகுதியும் படிக்க மிகவும் இலகுவாகவும், உற்சாகமாகவும் உள்ளது. இப்படியான ஒரு பாடத்திட்டத்தைத் தயாரித்துத் தந்த உங்களுக்கு எனது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

செல்வி லிங்கேஸ்வரி தட்சணாமூர்த்தி
கலைவாணி வீதி, டெலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

# BRIGHT TRAINING CENTRE

**P. O. BOX 162, COLOMBO.**

(ஏ 783)


## விம்பிள்டன்

உலகைப்பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள் முன் முதலில் 1877ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அச்சமயம் ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டம் மட்டும் தான் இருந்தது மொத்தம் 200 பார்வையாளர்கள். போட்டி மூலம் கிடைத்த வருமானம் 10 பவுண்கள்தான். (600 ரூபாய்)

இன்று விம்பிள்டன் போட்டியில் ஐந்து சம்பியன் போட்

(10ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்கள் பலன்

ஸச்சி

18 - 03 - 1990 முதல் 24 - 03 - 1990 வரை

கிர நிலை சூரியன் மீனம்; சந்திரன் - விருச்சிம் தனுசு மகரம் செவ்வாய் - மகரம்: புதன் மீனம்; வியாமன் மிதுனம்; சுக்கிரன் மகரம்; சனி மார்ச் 20ம் திகதி மாரராசியில் பிரவேசிக்கிறார்; இராகு மகரம்; கேது கடகம் யுரேனஸ்' நெப்டியூன் தனுசு

**மேடம்:** வார முற்பகுதியில் உடல்நலக்குறைவுண்டு. தொழில் முடக்சமுண்டு முதலீடு ஊ தவிர்க்கவும். குடும்பத்தில் பட்டும்படாத உறவு இருக்கும். நிதி நிலைமைபாதிக்கும். மனதிலே நிம்மதியைத் தராத சுமாரான வாரம்.

**இடபம்:** வாரமுற்பகுதியில் உற்சாகமும் கோரிக்கைகளும் அதிகமாகும், வீட்டில் அமைதியிருக்கும். பணப் புழக்சம் சுமாராக காணப்படுகிறது. தொழிலில் போதிய லாபமுண்டு. வார பிற்பகுதியில் பலன்கள் மாறலாம். நன்மை தீமை கலந்த வாரம்.

**மிதுனம்:** தொழிலில் மாற்றமுண்டு, முதலீடுகள் அதிகரிக்கும், நீண்ட நாட்களான உடல் ரோகம் குணமாகும் குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு தொழில் துறைகளில் சக தொழிலாளர் ஒத்துழைப்பு தருவர். நன்மையான வாரம்.

(11-ம் பக்கம் பார்க்க)

# தீயிட்டு எரித்தார்

ஸ்கொட்டிஷ் சவிஞரான ஜான்பிரெக்கென்ரிட்ஜ் தனது பாடலை யாருமே பாடக்கூடாது என விரும்பினார். இவர் இறப்பதற்குசிறிதுநேரத்திற்கு முன்பு தான் எழுதிய கவிதைகளின் கையெழுத்து பிரதிகள் அனைத்தையும் தீயிட்டு எரித்து சாம்பராக்கி விட்டு இறந்தார்.

## விம்பிள்டன்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

டிகளுக்கு 443 ஆட்டங்கள் விளையாடப்படுகின்றன.

இன்று நான்கு லட்சம் பார்வையாளர்கள் இப்போட்டியில் பார்வையாளர்களாக வருகின்றார்கள்.

போட்டியை நடாத்தும் ''ஆல் இங்கிலாந்து கிளப்'' கிட்டத்தட்ட ஏழாயிரம் பேரைஇந்த பதினைந்து நாள் போட்டிக்கு வேலையில் வைத்திருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட பதினைந்து மாதங்கள் இதற்கான ஏற்பாட்டைச் செய்ய தேவைப்படுகின்றன.

விம்பிள்டனில் சுமார் ஏழாயிரத்தி ஐநூறு பந்துகள் வருடம் பயன்படுத்தப்படுகின்றன.

# நிழலின் அருமை

நிழலே நிழலே நிறைநிழலே
நிரைநேர் மரங்கள் தருநிழலே
பொழுதாற் பொருந்தி வருகின்றாய்
பொருளின் உருவாய்த் தெரிகின்றாய்.

களையாறுதற்கு இடமாவாய்
கலையோ துதற்கு மடமாவாய்
விளையாடு தற்கு இடமாவாய்
விழிமூடு தற்கு மடமாவாய்.

அழையா விருந்திற் கிடமாவாய்
அருள்கூரு தற்கு அகமாவாய்
களிகூரு தற்கு இடமாவாய்
கதைபேசு தற்கு மடமாவாய்.

நிழலின் அருமை வெய்யிலிலே
நின்றோ ருக்கே தெரியுமென்று
முழுமை யான கருத்ததனை
முன்னோர் வைத்துச் சென்றனரே.

நிழலே நிழலே என்னிழலே
நீயேன் என்னைத் தொடர்கின்றாய்
அழிந்தே போகும் உடலுடனே
அழிந்தே போவாய் அறியாயோ.

உடம்பில் இருந்தே உதிக்கின்றாய்
ஒளியால் உன்னை மதிக்கின்றேன்
படம்போல் நீயும் பதிகின்றாய்
பருவம் பலதாய்த் தெரிகின்றாய்.

நடக்கும் போதே முன்பின்னாய்
நடந்தே நீயும் வருகின்றாய்
நடிக்கும் போதும் நடிக்கின்றாய்
நானில் லாமல் நீயில்லை.

உதயத் தின்கண் வளர்கின்றாய்
உச்சிப் பொழுதில் குறைகின்றாய்
மதியத் தின்பின் வளர்கின்றாய்
மாலைக் குப்பின் மறைகின்றாய்.

நேரம் பார்க்க ஓர்சமயம்
நிழலே நீயும் உதவுகிறாய்
பாரம் உனக்கு நான்தானே
பாரில் பதியும் படம்நீயே.

என்னிழ லேயெனக் காறுதலை
எப்பொழு தேனும் தந்தனையோ
தன்னிழ லாலே தருக்களுமே
தர்மம் செய்வதை உணர்வாயோ,

பலகோ ணத்தும் ஒளிபரவின்
பரவ மாட்டாய் என்னிழலே
சிலகோ ணத்தில் ஒளிபரவின்
சிறுத்தும் பெருத்தும் தெரிகின்றாய்.

— கவிஞர் வே. ஐயாத்துரை

# தமிழ் இலக்கியச் சுவை

## கம்பஞ் சோற்று விருந்து

''சோழநாடு பால்போகிறதா என்ன, நினைத்த இடங்களில் எல்லாம் பூம்பொய்கையும் ஆற்றுக் கால்களுமாக இருக்க? நீர்வேட்கையைத் தணித்துக்கொள்ள இயற்கை வசதி சிறிதும் இல்லையே! மற்றவர்களின் உதவியை நாடித்தான் ஆகவேண்டும் போலிருக்கின்றன'' கம்பருக்குத் தண்ணீர் தாகம் ஒரேயடியாக நாவறண்டு போகச் செய்கிறது. சோழநாட்டிலே எல்லா வளமும் இருந்தது. ''கூற்றிலும் பாவலர் கொடியவர்'' என்றான் சிந்தனையுணர்ச்சி அற்ற சோழ மன்னன். உடலை வருத்தித் துன்புறித்தினாலும் பொறுத்துக்கொண்டு இருந்து விடலாம். உண்மைக்கு நேர்மாறான கருத்தைக் கொண்டு உள்ளத்தை வருத்துவதைப் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. ''நீ முனிந்தால் எங்கட்கு இல்லையோ இடம்,'' என்று கூறி அவன் கருத்தை எதிர்த்துவிட்டு புறப்பட்டேன். இங்கோ கொங்கு நாட்டில் வந்து பார்த்தால் இப்படி இருக்கிறது. எங்கே பார்த்தாலும் கல்லும் பாறையுமாகத் தெரிகின்ற கல்லாங் காடுகள் காணப் பசுமை மிகுந்து தோன்றும் சோழநாடெங்கே? கொங்கு நாடெங்கே? சிந்தித்துக் கொண்டே வந்த கம்பர் தாம் ஒரு சிற்றூரை நெருங்குவதை உணர்ந்தார். தண்ணீர் வேட்கை அவரை நடையில் வேகங்கொள்ளச் செய்தது.

ஊருக்குள் இரண்டோர் வீடுகளில் மனையேறித் தண்ணீர் கேட்கும்நிலைக்காகக் கூட அவர் நாணவில்லை. ஆனால் அப்படிக் கேட்டும் பாராமுகமாக நடந்துகொண்ட எம் மனைக்குரியவர்களின்பண்பாட்டுக்காக நாணினார். இதைவிடத் தண்ணீர் குடியாமலே மேற்சென்று விடுவது நல்லது என்று வழிநடையைத் தொடர்ந்த அவரை ஓர் இனிய குரல் திரும்ப வைத்தது. ''ஐயா, எங்கள் வீட்டிற்கு வரலாமா?''. கம்பர் திரும்பிப் பார்த்தார் இருபது இருபத்திரண்டு வயது மதிக்கலாம் ஒரு வேளாளப்பெண் தயங்கித் தயங்கி நின்றுகொண்டே அவரை அழைத்தாள் அவள் இடுப்பில் தண்ணீர்க்குடம் இருந்தது. ''ஏன் அம்மணி! இங்கேயே சிறிது தண்ணீர் வார்த்தால் உண்டு செல்வேன்'' என்றார் கம்பர். ''இல்லை நீங்கள் களைட படைந்தவராக தென்படுகிறீர்கள் எங்கள் மனைக்கு வந்து சிறிது உணவருந்தி விட்டு போக வேண்டும்'' அவள் குரலில் [illegible] பாவம் இருந்தது. மறுக்க முடியாமல் கம்பர் பின் தொடர்ந்தார். வீட்டு வாயலில் அவள் கணவன் என்று மதிப்பிடத்தக்க ஆடவன் ஒருவன் அமர்ந்து கொண்டு இருந்தான். குறிப்பறியும் திறமைமிக்சவனாக இருக்கவேண்டும் அவன் தண்ணீர் குடத்தோடு மனைவி உள்ளே சென்றதும் ஒருநொடி உள்ளே சென்று யாவற்றையும் அறிந்துகொண்டு வாசலுக்கு வந்து கம்பரை வரவேற்று அமரச்செய்தான். கம்பர் தண்ணீர்வேண்டும் என்றார். அவன் 'உணவருந்தவேண்டும்'' என்றான். ''ஆகட்டும் நான் மறுக்கவில்லை. முதலில் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்' என்று அவர் கூறவும், அவன் நன்றாக விளக்கிய ஒரு செம்பு நிறையக் குளிர்ந்த நீர் கொண்டுவந்து கொடுத்தான். தாகம் தீரப்பருகினார் கம்பர். பசுமைமிக்க சோழ நாட்டில் அந்நாடு முழுமையும் ஆளும் சோழவேந்தனுக்கு இல்லாத மனப் பசுமை? கல்லும் மண்ணுமாகக் காட்சியளிக்கும் இந்தப் பசுமையற்ற கொங்குநாட்டில் ஓர் ஏழை வேளாளன் மனைவிக்கும் வேளாளனுக்கும் இருந்ததை அவர் உணர்ந்தார். அவன் பெயர் செல்வன் எனவும் தம்மை அழைத்து வந்தவள் அவன் மனைவி எனவும்தெரிந்து கொண்டார்.

சிறிது நேரத்தில் உள்ளேயிருந்த கதவிடுக்கில் அந்த வேளாளப் பெண்ணின் தலை தெரிந்தது. அவனுக்கு ஏதோ சைகை செய்தாள். அவள் கம்பரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள். உள்ளே இரண்டு இலைகளில் 'கமகம' வென்ற மணத்துடன் ஆவி பறக்கும் கம்பஞ்சோறு படைக்கப்பட்டுஇருந்தது. கம்பருக்கு நல்லபசி வயிறார அந்தக் கம்பஞ்சோற்று விருந்தை நுகர்ந்தார். செல்வன் மனைவியின் அன்புக்கரங்கள் விருப்போடு படைக்கும்போது மனத்தயக்கம் ஏற்படக் காரணமே இல்லையே!

கைகழுவி முடிந்ததும் கம்பர் அந்தக் கம்பஞ்சோற்று விருந்தையும் செல்வன் மனைவியையும் பாராட்டிப்பாடினார். அதில் நன்றி உணர்வு தொனிந்தது.

''கல்லங்காடு தனில்விளையாக்
கடுக நிலத்திற் ற [illegible] முளையா
அல்லனிருந்த [illegible] கருங்கூந்தல்
அணங்கு [illegible]
வாள்
செல்வன்தேவி [illegible]
[illegible]
தேடித் திரிந்தும் [illegible]
நெல்லஞ்சோறே [illegible]
சோற்றினை
நீ சுமந்து திரிவாயே''

உள்ளமில்லாத எத்தனையோ பேர்களுக்கு நடுவே அன்பே உள்ளமாக இருந்தசெல்வனையும் அவன் மனைவியையும் அவர்களிட்ட கம்பஞ்சோற்று விருந்தையும் பாட்டில் அவருக்கு ஒரு திருப்தி;

காரை செல்வராஜா

## பூநகரியிற்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், முதலியன பற்றி முதலில் ஆராய்ந்து புதினத்தாள்களிலே கட்டுரைகள் எழுதினார். தொடர்ந்து பழைமையான பல சின்னங்களை ஆராய்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். திரு. ஆர். டி. பனஹாஜி என்பவர் 1922 இல் மொஹெஞ்சதாராவிலே பௌத்த விகாரையொன்று பற்றி ஆராய்ந்தபோது சிந்து சமவெளி நாகரிகம் எனும் மிகப்புராதன சிறப்புள்ள இந்திய நாகரிகச் சின்னங்களைக் கண்டுபிடித்தாரோ, அது போலவே மத்திய காலச் சோழரின் சிவாலயம் பற்றி ஆய்வினைத் தொடர்ந்து இவரும் பூநகரிப் பிராந்தியத்திலே சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழம் தமிழர் நாகரிகம் நிலவியதற்கான தொல்லியல் தடயங்கள் பலவற்றைத் தமது இடைவிடாத முயற்சியினாலும், ஆர்வத்தினாலும் கண்டுபிடித்துள்ளார். தொடர்ந்தும் தொல்லியல் மேலாய்வுகளைச் செய்து பல சின்னங்களைக் கண்டுபிடித்து வருகிறார். இவர் இச்சின்னங்களைக் கண்டார் அல்லது கண்டெடுத்தார் என்பதிலும் பார்க்க அவற்றைக் கண்டுபிடித்தார் எனக்கொள்ளுதலே பொருத்தமுடைத்தாகும். ஏனெனில் இச்சின்னங்கள் ஏற்கனவே அங்கு இருந்தாலும் அவற்றைக் கண்டறிந்துஆராய்ந்து, அறிஞர்களினதும் பிறரினதும் கவனத்தை இவர் அங்கு திருப்பியுள்ளார். வரலாற்றிலே கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டான் என்று கூறாமல் கண்டுபிடித்தான் என்றே கூறப்படுகிறது என்பதும் ஈண்டு கவனித்தற்பாலது. தாம் இதுவரை ஆராய்ந்த தொல்லியல் சின்னங்களைப்பற்றியும், அவற்றின் விளக்கம், முக்கியத்துவம் பற்றியும் ஒருகட்டுரை எழுதி அதனை 21-1-1990ல் பல்கலைக்கழகக் கலைப்பீட ஆய்வரங்கிலே வாசித்தும் விளக்கியும் பலரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

இக்கட்டுரை வடஇலங்கை. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பூநகரிப் பிராந்தியத்தின் புராதன மத்தியகால வரலாற்றின் சில பிரதான அம்சங்களைத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் எடுத்துக்கூறுகின்றது. இதன்படி மண்ணித்தலை தொடக்கம் அரசபுரம் வரையுள்ள பூநகரிப் பிராந்தியத்திலே குறுணிக் கற்காலம் அல்லது இடைக்கற்காலம் தொட்டு ஐரோப்பியர் காலம்வரை (தொடர்ந்து) நிலவி வந்த நாகரிகத்தின் முக்கியமான சில தொல்லியல் தடயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு தொடர்ச்சியாக நிலவிய நாகரிகச் சின்னங்கள் வடபுலத்திலே சந்தரோடையிலேதான் இதுவரைகிடைத்துள்ளன. ஆனால் இங்கு கிடைத்துள்ள சில சின்னங்கள் கந்தரோடைச் சின்னங்களிலும் பார்க்க முக்கியமானவை எனவும் கூறலாம். இலங்கையிலுள்ள தொன்மையான நாகரிகமிருந்த பிற இடங்களிற்போன்று இங்கும் வரலாறு குறுணிக் கற்காலத்தோடு தொடங்கிற்று எனக் கொள்ளும் வகையில் குவாட்ஸ் கற்கள், ஆயுதங்கள், மீன்பிடித்தற்கான ஊசிகள் முதலியனவே தொன்மையான சின்னங்களாக மண்ணித்தலை, வெட்டுக்காடு, கௌதாரிமுனை முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இவை சமகாலத் தமிழகச் சின்னங்களுடனும் ஒப்பிடற்பாலன. தொடர்ந்து, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் போன்று பெருங்கற்பண்பாடு நிலவியதற்கான சின்னங்கள் பல கிடைத்துள்ளன. பெருங்கற்பண்பாடு இந்தியாவிலே குஜராத், மஹாராஷ்டிரம், மைசூர், ஆந்திரா, தமிழ்நாடு, கேரளம் முதலிய மாநிலங்களிலும், இலங்கையிலே பொன்பரிப்பு, மாந்தை, அனுராதபுரம், கதிர்காமம், கதிராவெளி முதலிய இடங்களிலும் நிலவிற்று. இப்பண்பாடு திராவிடருக்குரியதாகும். இது இந்தியாவில் சுமார் கி. மு. 1000 ஆண்டு தொடக்கம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலும், இலங்கையில் சுமார் கி. மு. 600 தொடக்கம் மேற்குறிப்பிட்ட காலம் வரையிலும் நிலவிற்று. கல்முனை தொடக்கம் அரசபுரம் வரையிலுள்ள பகுதியிலே பெருங்கற் பண்பாட்டிற்குரிய தாழிகளின் துண்டுகள், கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், மணிவகைகள், இரும்பினாலான கைக்கோடாரி, கத்தி முதலிய கருவிகள், சுடுமண் அகல்விளக்குகள் முதலியனவும் குறிப்பிடற்பாலன. இவற்றைவிட வெட்டுக்காட்டிலே கிடைத்த கெண்டியுடன் கூடிய தாழி குறிப்பிடற்பாலது. இத்தகைய பானை இதுவரை இலங்கையில் கிடைக்கவில்லை.

[தொடரும்]

# புதிய தபால் பெட்டிகள் தனியார் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், வைரவர் கோவிலுக்கு முன்பாக பொதுமக்கள் நலன் கருதி தபால்பெட்டி அமைக்கப்படவுள்ளது.

இது தவிர தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்பாகவும், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தி ஆகிய பகுதிகளிலும் இதே மாதிரியான தபால்பெட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண பிரதேச தபாலகங்களுக்கு அபிவிருத்திநிதி எதுவும் இதுவரை வழங்கப்படாமையால் புதிய தபால் பெட்டிகள் அமைக்கும் பணி நடைபெறவில்லை.

பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் தாமாக

(12ம் பக்கம் பார்க்க)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம் நல்லூர், யாழ்ப்பாணம் ஆசிய அபிவிருத்தி வங்கி, கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ்

## யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேசக் கல்வித்திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ம் திகதி (02 – 04 – 90) மு. ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம் கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாதாவதொரு திணைக்களத்தில் பதிவ செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி (28-03-1990) பிற்பகல் 2-00 மணிவரை மீளளிககப்படாத கேள்விப் பணமாக (ரூபா. 50/-) ரூபா ஐம்பதும், மீளளிக்கப்படும் கேள்விப்வைப்புப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ 250/-) செலுத்தியதன்பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் பணம் ரூபா ஐம்பதும் பணமாக கல்வித்திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்வி வைட்புப் பணம் வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1990 ஆம் ஆண்டுஏப்பிரல் மாதம் 02 ஆம் திகதி (02-04-90) முற்பகல் 10-00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்தச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப்படியும். ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறுது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 01. | யா/யாழ். இந்துக்கல்லூரி | 90'X25' (மாடிக்கட்டிடம்) மிகுதி வேலைகள் 02 கட்டடகள் | 600,000-00 |
| 02. | யா/யாழ். மத்திய கல்லூரி | பெருந்திருத்த வேலைகளும் மலசலகூடம் அமைத்தலும் | 300,000-00 |
| 03. | யா/யாழ். கன்னியர்கடம் தமிழ்ப் பாடசாலை | பெருந்திருத்த வேலைகளும் நீர்த்தாங்கி அமைத்தலும் | 200,000-00 |
| 04. | யா/நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை | 70'X25' 03 மாடிக் கட்டிடம் | 1,100,000-00 |
| 05. | யா/பொம்மைவெளி அ. மு. க. பாடசாலை | 68'9''X25' — 02 மாடிக் கட்டடம் | 650,000-00 |
| 06. | யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை. | 90'X25' — 03 மாடிக் கட்டடம் விஞ்ஞானகூடமும் வகுப்பறைகளும | 1,500,000-00 |
| 07. | யா/நாரந்தனை றோ. க. த. க. பா. | பெருந்திருத்த வேலைகளும் 100'X20' கட்டடமும் | 350,000-00 |
| 08. | யா/நீர்வேலி றோ. க. த. க. பா. | 70'X20'—02 மாடிக் கட்டடம் | 700,000-00 |
| 09. | யா/இராமநாதன்கல்லூரி | பெருந்திருத்த வேலைகளும் நீர்த்தாங்கி அமைத்தலும் | 1,000,000-00 |
| 10. | யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை | 50'X25'—02 மாடிக் கட்டடம் | 600,000-00 |
| 11. | யா/பாரதி பாஷிய வித். யாழ்ப்பாணம். | 68'9''X25' — 02 மாடிக் கட்டடம் | 750,000-00 |
| 12. | யா/புலோலி மெ. மி. த. க. பா. | நீர்த்தாங்கி அமைத்தல் | 150,000-00 |
| 13. | யா/ஹாட்லிக் கல்லூரி | நீர்த்தாங்கி அமைத்தல் | 150,000-00 |
| 14. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை | பெருந்திருத்த வேலைகள் | 900 000-00 |
| 15. | யா/நெல்லியடி ம. ம. வித். | 90'X25'—03 மாடிக் கட்டடம் விஞ்ஞானகூடமும், வகுப்பறைகளும் | 1,600,000-00 |
| 16. | யா/நெல்லியடி ம. ம. வித். | 90'X25'—02 மாடிக் கட்டடம் | 1,500,000-00 |
| 17. | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 90'X25'—02 மாடிக் கட்டடம் | 750,000-00 |
| 18. | யா/இளவாலை கன்னியர்மடம் ம. வித். | 40'X25' மூன்றுவது கட்டடம் | 200,000-00 |
| 19. | யா/வட இந்து மகளிர் கல்லூரி | 130'X25' கீழ்மாடி மிகுதி வேலைகள் | 200,000-00 |
| 20. | யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தி. | பெருந்திருத்த வேலைகள் | 200,000-00 |
| 21. | யா/கலட்டி மெதடிஸ் மிஷன் த. க. பா. | 68'9''X25' முதலாம் கட்டடம் மேல்மாடி | 400,000-00 |
| 22. | யா/குட்டியபுலம் அ. த. க. பா. | மேல்மாடி | 400,000-00 |

(ஏ-615)

## இவ்வார பலன்

(10ம் பக்கத்தொடர்ச்சி)

**கடகம்:** வாரமுற்பகுதியில் நிலவிய சங்கடங் ள் குறையும். பணவரவுண்டு குடும்பத்தில் அன்னியோன்யம் நிலவும் தாய் தந்தையரின் ஒத்துழைப்பு கிட்டும், தேர்வுளில் சித்தியுண்டு, மகிழ்ச்சி நிலவும் வாரம்.

**சிங்கம்:** குடும்பத்தில் சந்தேகங்கள் பூதாகரமாக உருவெடுக்கும், தொழில் பாதிக்கும், அரச ஊழியர்க்கு நெருக்கடியுண்டு. திருமணப் பேச்சுக்கள் தடைப்படும், மந்தமான வாரம்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவியஅமைதிகுறையலாம். குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்படலாம், வைத்தியசெலவுகள் அதிகமாகும், தொழிலில் போதிய லாபமிருக்காது, அரசதுறையினரின் கெடுபிடி உருவாகும், பணப்புளக்கம் மந்தமாக இருக்கும், குழப்பம் தரும் வாரம்.

**துலாம்:** குடும்பத்தில்ஓரளவு அமைதி காணப்படும், பழைய நினைவுகள் சில பிரச்னைகளை தோற்றுவிக்கும், அரசியல் விரோதமுண்டு, தொழிலில் புதிய பிரச்சனைகள் தலைதூக்கும், மனஅமைதி குன்றும், பயணங்கள் அலைச்சலைத் தரும், சாதாரண வாரம்.

**விருச்சிகம்:** வீட்டில் மகிழ்ச்சியும் சுபகாரியங்களும் இருக்கும், உறவினர் ஒருவரின் வருகை . புதிய திருப்பத்தைத் தரும், பண நிலைமை திருப்தி தரும், தொழிலில் அதிகலாபமுண்டு, பயணங்களால் நன்மையுண்டு, அனுகூலான வாரம்.

**தனுசு:** குடும்பத்தில் எதிர்பாராத செலவினங்களுண்டு, உடல்நலம் தொல்லை தரும் தொழிலில் லாபம் இருக்கும், பெண்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிட்டும், சாதரரண வாரம்.

**மகரம்;** கும்பத்தில் மனைவி மக்களிடையே மனஸ்தாபம் உருவாகும், பணநிலைமை பாதிக்காது, தொழிலில் முதலீடுகள் லாபம் தராது. வெளியூர் யயணங்களுண்டு. பெரியவரது ஆசி கிட்டும், மகிழ்ச்சி குன்றிய வாரம்.

**கும்பம்:** கும்பத்தில் வீண் செலவுகள் குறைந்து மகிழ்ச்சி நிலவும், தொழிலில் பதவி உயர்வுகளும் மாற்றங்களுமுண்டு, பழைய கடன்கள் வசூலாகும், மக்களால் புகழுண்டு, உறவு முறையில் நிலவிய பகைமை நீங்கும் திருப்திகரமான வாரம்.

**மீனம்:** வார முற்பகுதியில் இருந்து வந்த துன்பங்கள் வாரபிற்பகுதியில்அகலும், தொழிலில் உற்சாகமும் லாபமுண்டு. காரியங்கள் பலிதமாகும். எதிர்பார்த்த செய்தி கிட்டும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். நன்மையான வாரம். (12)


எமது நேற்றைய

**புதிய வெளியீடுகள்**

வீடியோ ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விசேஷமாகத் தருவிக்கப்பட்ட ஒரிஜினல் பிரதிகள்.

(1) விஜயகாந் ★ ஷோபனா ★ S. S. சந்திரன் வழங்கும்
**"புலன் விசாரணை"**

(2) பிரபு ★ ரம்யா ★ செந்தில்
**"நல்ல காலம் பொறந்தாச்சு"**

(3) ஜெமினி ★ சாவித்திரி ★ தங்கவேலு
**"ஸ்ரீ கிருஷ்ண பலராமன் கதை"**

**குணம் வீடியோ சென்ரர்,**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(எ-621)


குருகுலம்

## சைவப் போதகர் பயிற்சி

மேற்படி மூன்று வருடகால முழுநேரப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(1) கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் 4 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.
(2) 1990-04-01ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதிருத்தல்.

சலுகைகள:

(1) பயிற்சி இலவசம்.
(2) வதிவிடமும் உணவும் இலவசம்.

நிபந்தனைகள்:

(1) மூன்று வருடகாலமும் தொடர்ந்து குருகுலத்தில் வசிக்கவேண்டும்.
(2) குருகுல வாழ்க்கை முறையைப் பின்பற்றி ஒழுகவேண்டும்.

முன்னர் பயிற்சி வகுப்புத் தடைப்பட்டதால் பயிற்சியை நிறைவுசெய்யாதவர்கள் விண்ணப்பித்தால் தடையின்றித் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பங்கள் பெயர், முகவரி ஆகிய விபரங்களுடனும் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடனும் 1990-04-01ந் திகதிக்கு முன் நிர்வாகச் செயலாளர், குருகுலம், 7-ம் வாய்க்கால், கிளிநொச்சி என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

தலைவர்,
குருகுலம். கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம்.
(எ-619)

# மினிபஸ் - சைக்கிள் விபத்து சிறுமி படுகாயம்

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரியில் இடம் பெற்ற மினிபஸ், சைக்கிள் விபத்தொன்றில் ஒருசிறுமி படுகாயமடைந்தார். சைக்கிள் சேதத்திற்குள்ளானது.

நேற்று சாவகச்சேரி நீதி மன்றத்திற்கு முன்பாக இடம் பெற்ற இவ்விபத்தில் நுணுவிலைச் சேர்ந்த சுபலதா கதிர்காமநாதன் (வயது 8) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

தகப்பனுடன் சைக்கிளில் சந்தைக்குச் சென்று வீடு திரும்பும்வழியில் பின்னால் வந்த இரண்டு மினிபஸ்கள் ஒன்றை ஒன்று முந்திச்செல்ல வேகமாக எத்தனித்தபோது சைக்கிளை பின்பக்கமா- மோதி விபத்திற்குள்ளானது சைக்கிளின் பின்னாலிருந்து வந்த சிறுமி தலையில் அடிபட்டு படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த சிறுமி சுயநினைவிழந்தநிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு உடன் அங்கிருந்து மாற்றப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அளவெட்டியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார் சைக்கிள் சிறுசேதத்திற்குள்ளானது-

இளவாலை பெரியவிளானைச் சேர்ந்த தம்பையா நல்லையா (வயது 70) என்றவயோதிபரே படுகாயமடைந்தவராவார். (56)

## தவறி விழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து சென்ற பெண் தவறிக்கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

நுணுவிலில் இடம் பெற்ற இச்சம்பவத்தில், சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த ஜ செல்வராணி (வயது 32) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கணவனின் மோட்டார் சைக்கிளில் குழந்தையும் கையில் வைத்துக் கொண்டு பின்னாலிருந்து சென்ற அப்பெண் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிக் கீழே விழுந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (56)

## அரசு விடுதலைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுக்களை குழப்பவும், சிங்களவர் மீது தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் மீண்டும் இலங்கை படையினருக்கும் புலிகளுக்குமிடையில் முரண்பாடுஒன்றை ஏற்படுத்தவும் வடக்கு-கிழக்கில் அமைதியை குலைக்கவும் சில சக்திகள் முயல்வதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## புதிய தபால்

(11ம் பக்கத் தொடர்ச்சி)
முன்வந்து இதற்கான செலவினங்களுக்கு நிதியுதவியை வழங்க முன்வந்தால் தபால் பெட்டிகளின் நிர்மாணப்பணிகளை தபாலகம் செய்யுமென யாழ்ப்பாணப் பிரதேச தபால் அத்தியட்சகர் தெரிவித்தார். (12)

## யாழ் பத்திரிகைகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளை கொள்வனவு செய்யாது அவற்றிற்கு தடை விதித்துள்ளது.

இதேவேளை மல்லிகை போன்ற சஞ்சிகைகளுக்கும் இந்நூலகத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறித்து வாசகர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (121)

## மரண அறிவித்தல்

### V. S. முத்தையா

நாரந்தனை

நாரந்தனை பிரபல அக்குறச வர்த்தகர் V. S முத்தையா அவர்கள் 17-3-1990 இல் காலமானர். இவர் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் தேசோமயானந்தன் (பிரான்ஸ்), சற்குணானந்தன் (V. S M ஸ்ரோர்ஸ், யாழ்), சிவானந்தன் (U. K) தேவமதி(நாரந்தனை)தேவானந்தன் (V S.முத்தையா அன் சன்ஸ் அக்குறச) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜா (பிரான்ஸ்), இந்திராவதி, வசந்தா (U K), செல்வநாதன் (E. O. விவசாய ஆராய்ச்சி நிலையம், கிளிநொச்சி) கலாநிதி ஆகியோரின் அருமை மாமனரும் காலஞ்சென்ற கோணேசபிள்ளை, காலஞ்சென்ற தங்கம்மா இராயநாதன், காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின அருமைச் சகோதரரும, காயத்திரி (பிரான்ஸ்), சத்யன் (பிரான்ஸ்) சஞ்ஜயன் (இந்தியா), சுகன்யா (U. K), சுஜாகன் (U K), சுகாகர், தேவகி, வைதேகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 18 - 3 -90 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 9 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
மு. சற்குணனந்தன்
(சிவம்)

''தேவகிரி''
நாரந்தனை, ஊர்காவற்றுறை.

(சி-3617)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81

# இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் நடத்தும் கலந்துரையாடலொன்று இன்று முற்பகல் 10.30 மணியளவில் கண்டி வீதியிலுள்ள லீலா பேக்கரியில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. ரி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ

(பண்டத்தரிப்பு)
தொழுநோய் தடுப்பு பற்றிய முக்கிய கருத்தரங்கு ஒன்று இன்று 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார்.

ஃ ஃ ஃ

(கொக்குவில்)
கொக்குவில் இந்துக்கல்லூரி க. பொ. த. உயர்தர மாணவர் ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தலைவர் செல்வன் பா சஞ்சயன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. தேவராஜா கலந்து கொள்வார் (135)

ஃ ஃ ஃ

(வட்டுக்கோட்டை)
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் இன்று 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வித்தியாலயப் புனரமைப்பு வேலைகளில் பங்களிப்புச் செய்யப் பழைய மாணவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளதாக வயாவிளான் கொத்தணி அதிபர் திரு. ஏ. எஸ். நடராஜா தெரிவித்துள்ளார்கள். (139)

ஃ ஃ ஃ

(பருத்தித்துறை)
இரா. சந்திரசேகரனின் ''விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்'' நூலின் இரண்டாம் பதிப்பின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில நடைபெறவுள்ளது.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் போக்குவரத்து ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைக்கூட்டமொன்று இன்று காலை யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் தலைமை தாங்குவார். [12]

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)
சர்வதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் தீவுப்பகுதிக்கிளையினரின் சான்றிதழ் வழங்கும் வைபவமும் கைநூல் வெளியீடும் இன்று காலை புங்குடுதீவு சுப்பிரமணியர் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

## நட்புறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சமாதான உடன்படிக்கையின் பல சரத்துகளையும் இப்புதிய உடன்பாட்டில் சேர்க்க விருப்பம் தெரிவித்துள்ளது. இதையடுத்து இரு தரப்பிடையேயும் பெரும முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகவும் அவ் அவதானிகள் குழு தெரிவித்துள்ளது. (சி)

# மாகாணசபை கலைப்பு பற்றி சட்டமா அதிபருடன் ஆலோசனை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாண சபையின் எதிர்காலம் குறித்து இலங்கை அரசு, சட்டமா அதிபர் திரு. சுனில் டி. சில்வாவுடன், முக்கியமான ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளது. இதன் சகல விபரங்களும் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டுவருகிறது.

வட-கிழக்கு மாகாண சபையை திரு. வரதராஜப் பெருமாள் ஒருதலைப்பட்சமாக 'ஈழஜனநாயக குடியரசாக பிரகடனப்படுத்தியதையடுத்து தற்போது மாகாண சபையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

மாகாணசபையை கலைப்பது தொடர்பான ஜனாதிபதியின் உத்தரவு மேற்படி சட்டமா அதிபரின் இறுதி முடிவின்படி விரைவில் வெளிவரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கோவா கறி உண்ட ஐவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)
கடையில வாங்கிய கோவாவைச் சமைத்து உண்ட ஒரே வீட்டைச் சேர்ந்த ஐவர் வாந்தி, வயிற்றோட்டம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த அம்பலவாணர் தனபாலன் (வயது 39) என்பவரும் அவரது மனைவி ரஞ்சிதமாலா (வயது 38) பிள்ளைகள், யாழினி (வயது 11) ரேகன் (வயது 16) ஆகியோரும் அவர்களின் வீட்டில் தங்கியிருக்கும் மீசாலையைச் சேர்ந்த ஜெயசிரி சதாசிவம் (வயது 51) என்பவருமே கோவா கறியை உண்டதனல் வாந்திபேதிக்குட்பட்டவர்களாவர்.

இவ்வீட்டிலுள்ள மூன்று பிள்ளைகள் இக்கறியைச் சாப்பிடாததனல் வாந்திபேதியிலிருந்து தப்பித்துக்கொண்டனர். (56)

# இலங்கை வங்கியில் நிவாரணக்கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிக்கிளையில் இரு கருமபீடங்களில் நாளை 19ம் திகதி திங்கட்கிழமை காலை கீழ்க்காணும் கிராம சேவையாளர். பிரிவிலுள்ளவர்களுக்கு 1000 ரூபா நிவாரணம் வழங்கப்படும்.

ஜே/166 உசன் கிராமசேவகர் அலுவலர் பிரிவில் 306 குடும்பங்களுக்கும் ஜே/160 மீசாலை வடக்கு கிராமசேவை அலுவலர் பிரிவில் 301 குடும்பங்களுக்கும் 1000 ரூபா வழங்கப்படும்.

நாளைமறுதினம் 20ம் திகதி ஜே/172 வரணி வடக்கு கி.சே. அ பிரிவில் 317 குடும்பங்களுக்கும் ஜே 174 கரம்பை குறிச்சி கி. சே. அ. பிரிவில 112 குடும்பங்களுக்கும், ஜே/167 விடத்தல்பளை கி. சே. அ பிரிவில் 80குடும்பங்களுக்கும் 1000ரூபாவழங்கப்படும்.

இதேவேளை இன்று சண்டிலிப்பாய் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள642 குடும்பங்களுக்கு இலங்கைவங்கியின் யாழ். ஆஸ்பத்திரிவீதிக்கிளை ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

## இந்தியப் படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தமது முயற்சியில் தோல்வி கண்டது ஏன்? என்று கேட்டபோது திரு. மத்தையா தெரிவித்ததாவது:

இந்திய இராணுவத்தின் பிரதான நோக்கம, யாழ்ப்பாணத்தில் வைத்து தலைவர் பிரபாகரனைக் கைது செய்வதாகும். இதனை ஒருசில நாட்களிலேயே சாதித்துவிடலாம் என்று அவர்கள் நினைத்திருந்தனர். ஆனல் ஒரு மாதத்துக்கு மேலாகியும், அது நடக்கவில்லை. தலைவர் பிரபாகரனையோ அல்லது எமது போராளிகளையோ உயிருடன் கைது செய்வது முடியாத காரியம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. நாம் கைது செய்யப்படுவதிலும் உயிரை விடுவதற்கே தயாராக இருந்தோம்; இருக்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள முடியாத இவர்கள் எப்படி எம்முடன் போராட முடியும்'' என்ருர்.

## யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யாரும் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கடந்த மூனருண்டுகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் வந்துள்ள திரு. அன்ரன் பாலசிங்கம் சில தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்துபல்வேறு முக்கியஸ்தர்களுடன் அவசர ஆலோசனைகளை நடத்தவுள்ளார். இதேவேளையில் திரு கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா)வும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கின்ருர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைமையகம் இம்மாதம் இருபதாம் திகதி கோண்டாவிலில் திறந்துவைக்கப்படுவதுடன் அவ்விழாவில் மாத்தயா, அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இந்தக் கொடி அகற்றப்பட்டு மேற்படி செயலகத்தில் இலங்கைப் பொலிசார் இடம் பெற்றுள்ளனர்

வடக்கு-கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு ரி. ஈ. ஆனந்தராஜா தெரிவிக்கையில், திருகோணமலையில் எல்லாமே வழமைக்குத் திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டார்

இதே நேரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல நளின் செனிவரத்ன நேற்று கருத்து வெளியிடுகையில், திருகோணமலையில் எல்லாமே அமைதியாக உள்ளது என்ருர்

## கனடாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள தொகை முன்னைய ஆண்டுகளில் இரண்டு அல்லது மூன்று வீதயாக மட்டுமே இருந்தது. ஆனல் கடந்த ஆண்டு நான்கு வீதத்திற்கும் மேலாக அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பூரண விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டவர்களில் ஒருவரான ரவிபாலசுந்தரம் என்ற தமிழ் இளைஞருக்கு கனேடிய அரசு வெளியேற உத்தரவு வழங்கி வழங்கியுள்ளது.

கனேடிய அரசு, அகதி அந்தஸ்து கோருபவர்கள குறித்து எடுக்கும் முடிவுகளைப் பற்றித்திட்டமிட்டு கூறமுடியாதிருப்பதாக கனடாவிலுள்ள யாழ்ப்பாணத்தமிழர் ஒருவர் தெரிவித்துள்ளார்.